# பசுமை திரைப்பட விழா

## கோவையில் / சுப்ரபாரதிமணியன்

பசுமை திரைப்படம் விழா மறுபக்கம் மாற்று திரைப்பட களம் ஏற்பாடு செய்திருந்து. மண், .மலை, காடு, நீர் என்று அதன் விளம்பரங்களில் வாசங்கள் பெரிதாக இருந்தன

.பசுமை திரைப்பட விழாவை துவக்கி வைத்து உரையாற்றிய பபா ரமணி : : பெரிய நிறுவனங்களுக்கும் கார்ப்பரேட்டுகளுக்கும் லாபம் தான் குறிக்கோளாக இருக்கிறது அவர்கள் சுற்றுச்சூழலை கவனிப்பதில்லை அவர்கள் கவனம் முழுக்க வியாபாரம் சார்ந்திருக்கிறது. இந்த நிலையில் சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வை தர வேண்டியது முக்கியமாக இருக்கிறது என்றார்

இந்த பசுமை திரைப்பட விழாவின் நெறியாள்கை செய்த ஆவணப்பட இயக்குனர் அமுதன் அவர்கள் : நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான தரவுகள் இன்றைய நாளில் நமக்குக் கிடைக்கிறது. பலர் அதை பதிவு செய்வதில்லை ..என்ன செய்ய.. கொஞ்சமாவது பதிவு செய்தால் நன்று என்று ஆவணப்படங்கள் எடுக்க வேண்டி இருக்கிறது ஆனால் வருகையாள 50 வயதுக்கு மேல் தான் இருக்கிறார்கள் இன்று இந்த திரைப்பட விழாவுக்கு வந்திருக்கிறார்கள். இளைய தலைமுறையினர் அக்கறை கொள்ள வேண்டும்.

முதல் படமாக ”கோரல் வுமன்“ என்ற படம் பிரியா துவச்சேரி அவர்களுடைய இயக்கத்தில் இடம்பெற்றது ..பவளப் பாறைகள் பற்றிய படம். பவளப் பாறைகள் பிரியாணி பாத்திரங்கள் போல் இருப்பதாக வருணனை வருகிறது. உமா மணி என்ற ஒரு பெண்மணி பவளப் பாறைகள் பற்றிய ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் கொள்கிறார் 49 வயதில் அவர் நீச்சல் மூலமாக கடல் பகுதிக்கு சென்று இந்த பவளப் பாறைகளை காண்கிறார். .பழைய காலத்தில் சுவற்றில் கற்களுக்கு பதிலாக பவளப்பாறைகள் இருப்பது காட்டப்படுகிறது. கடல் நீலமாக இருந்தாலும் உள்ளே பவளப் பாறைகள் வசீகரம் இழந்து போய் பாலையாக தான் காட்சியளிக்கிறது. சுமார் 120 வகையான பவளப்பாறைகள் உள்ளன .தூத்துக்குடி பகுதியில் உள்ள பவளப்பாறை

பகுதியில் கடல் ஆய்வுகளும் கடல் பகுதி உணவுகளும் சேகரிப்பு சிறந்த முறையில் காட்டப்படுகிறது .

நான் ஒரு நல்ல பெயிண்டர் அல்ல. ஆனால் ஒரு மகிழ்ச்சிகரமான பெயிண்டர் என்று அவர் சொல்கிறார் .தண்ணீரில் நெகிழி துணுக்குகள் படிந்து நீர் கருப்பு நிறத்தில் மாறுபடுகிறது. ராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் பக்தர்கள் குளித்துவிட்டு துணிகளைப் போட்டு ஒரு வகை குப்பைகளை உருவாக்குகிறார்கள். .அப்படி துணிகளை கழட்டி போட்டு விட்டால் தங்கள் தோஷம் கழியும் பாவம் குறையும் என நினைக்கிறார்கள். .மன்னார் வளைகுடா பகுதிகளில் ஹோட்டல் கழிவுகளும் வீட்டுக்கு கழிவுகளும் பவளப் பாறைத் திட்டு பகுதிகளை நாசமாக்குகிறது . அதிக வெப்பம் காரணமாக பவளப்பாறைகள் நிறமிழந்து விடுகின்றன. நான் பார்த்த உலகத்தை நீங்களும் பார்க்க வேண்டும் எனவே கடலுக்கு சென்று அவற்றையெல்லாம் பாருங்கள் .பார்க்க முடியாதவர்கள் என்னுடைய பெயிண்டிங் மூலமாக அவற்றை காணுங்கள் என்கிறார் அந்த பெண்மணி

பெஸ்டரிங் ஜெர்னி : சுற்றித் திரியும் பறவைகள் பூச்சிகள் .அமைதியாக இருக்கிற சூழல். மேலே பறக்கும் ஹெலிகாப்டர் சத்தங்களும் தொழிற்சாலை இயந்திர வேகங்களும் அவற்றை நிம்மதியைத் தடுக்கின்றன .

பூச்சி கட்டுப்பாடு என்று சிறு பூச்சிகளை கொல்வது மனிதர்கள் இயல்பாக இருக்கிறது. ரோஸ்டர் முதல் கொண்டு எலி பொறி வரைக்கும் பல வகையான விஷயங்கள் இவற்றையெல்லாம் அழிப்பதற்காக பயன்படுத்துகின்றனர் .

பூச்சி என்றால் என்ன

பூச்சி என்பது நீயா

நானா

நீ என்னை பார்க்கும் பார்வையா

என்ற வாசகங்கள் தொடர்ந்து இந்த படத்தில் இடம்பெற்று கொண்டே இருக்கின்றன.. பூச்சிகள் சார்ந்த உலகம் அவை இயற்கைக்கு எப்படி உதவியாக இருக்கின்றன என்பதும் காட்டப்படுகிறது பூச்சிகளைத் தாண்டி மனிதர்களுக்கும் இப்படி நகர்கிறது படம்.

அடுத்த பகுதி பஞ்சாபின் பருத்தி விளையும் பகுதிகளைக் காட்டுகிறது. கொங்கு பகுதியில் பின்னலாடை துறை வளர்ந்து வந்தாலும் இன்று பருத்தி விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. ஆனால் பஞ்சாபில் பருத்தி நல்ல விளைச்சல் இருக்கிறது .ஆனால் அதன் விளைவுகளை பார்க்க பயமாக இருக்கிறது .பிடி காட்டன்

விரைவடைகிற.து .அதற்காக நிறைய மருந்துகளை அடிக்கிறார்கள் .அதனால் மக்களுக்கு புற்றுநோய் வருகிறது பூச்சி மருந்துகளும் மற்றும் ரசாயன மருந்துகளும் பயன்படுவதால் இந்த நோய் வருகிறது .இந்த பஞ்சாப்பில் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு இந்த விவசாயம் சார்ந்த பகுதியிலிருந்து புற்றுநோய் பாதிக்கப்பட்ட மக்களை கொண்டு செல்லும் ஒரு தொடர்வண்டியை கேன்சர் டிரெயின் என்று அழைக்கிறார்கள் மக்கள். .அவை புற்றுநோய் மருத்துவமனைக்கு மக்களை கொண்டு செல்கின்றன. அவர்களை கொண்டு செல்வதற்காக சாதாரண மக்களும் ரிக்க்ஷாக்காரர்களும் புரோக்கர்களும் இருக்கிறார்கள் .

இன்னொரு பக்கம் கேரளாவில் எண்டோசல்பான் விளைவித்த பாதிப்புகளை இந்த படம் காட்டுகிறது 74 நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கிறது .ஆனால் இந்தியாவில் அவற்றின் பயன்பாடு எப்படி மக்களை ஊனமாக்கி நடமாட வைக்கிறது என்பதை காசர்கோடு பகுதியை மையமாக வைத்து இந்த படம் சொல்கிறது. வானத்தில் ஹெலிகாப்டர்கள் பூச்சி மருந்துகளை தூவி விட்டு போகின்றன அல்லது சிமெண்ட் தொட்டிகளில் நிரப்பி நிறைய விளைச்சலை தர வேண்டும் என்று சொல்லி நம்பிக்கையை ஊட்டுகிறார்கள். எல்லாம் பொய்யாகிப் போகிறது இந்த சூழலில் லீலா குமாரி போன்றவர்கள் இதை எதிர்த்து போராடுகிறார்கள். விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள் இவர்கள் தங்கள் பிரச்சினைகளை தொலைக்காட்சி மூலம் செய்தித்தாள்கள் மூலம் சொன்னாலும் பயன் இல்லை ஆனால் சிரமங்களும் துயரங்களும் தொழுது கொண்டிருக்கின்றன. சுதந்திர இந்தியா அணிவகுப்பை ஒரு வண்டியின் மீது இருந்து வேடிக்கை பார்க்கும் ஒரு பூச்சியின் பார்வையோடு இந்த படம் முடிகிறது. மக்களும் பூச்சியாளராக மாறிவிட்டார்கள். மருந்து தெளிப்பு நிறுத்திய பின்னால் எல்லாமும் மாறிவிட்டது. மருந்து என்பது பொதுப் பிரயோகம் இந்த ரசாயனங்கள் பற்றி இயல்பாக இருக்கிறது என்கிறார்கள். இந்த அம்சங்களையும் இந்த படம் பதிவு செய்து இருக்கிறது பூமிக்கு தீ வைத்தோம் என்று அலறுகிறது படம்

என் பெயர் பாலாறு :தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர் ஆர் சீனிவாசன் இயக்கியிருந்த ஆவணப்படம் இந்த ஆறு எனக்கு நேரடியாக பல அனுபவங்களை திருப்பத்தூரில் வசிக்கிற போது அறிந்திருக்கிறேன்,அந்த ஆறு இப்படி மக்களின் வாழ்க்கையில் பங்கு போட்டுக் கொள்கிற இந்திய வாழ்க்கையில் ஒன்றுபட்ட பாரதம் என்ற பெயரும் உண்டு

பாலாறு பகுதியில் வீட்டுக் கழிவால் தொழிற்சாலை கழிவுகளால்

ஆறு மாசுபட்டு வறண்டு போயிருப்பதையும் இது சார்ந்த போராளிகளும் எழுத்தாளர்களும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறார்கள் நீண்ட படத்தில் இது போன்ற விளக்கங்களும் விவரங்களும் தரும் கூட நிறைய பேர் இருக்கின்றனர் எதிர்ப்பையும் பகிர்ந்து கொள்கிறார்கள் . முக்கிய எதிர்ப்புக்குரல்.

பொன். குமார் இப்படி கருத்து தெரிவித்தார்:

ஐம்பது வருடங்களாக ஜீவநதியாக பயணபட்ட நான் இன்று ஒரு நீரோடையாக மாறி பின் சாக்கடையாக உருமாற்றம் பெற்றுள்ளேன் என பெண் குரலில் தன் வரலாறு கூறுவதாக படம் தொடங்குகிறது. பின்னணியில் குரல் கொடுத்து இருப்பவர் பிரமிளா. நதியின் சோகத்தை முழுமையாக உள் வாங்கி ஒலித்துள்ளார்.

பாலாறைக் காக்க வேண்டும் என்று ஆர்.ஆர்.சீனிவாசன் ஆவணப்படம் வாயிலாக மாநில, மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். கவனத்தை ஈர்க்க முயன்றுள்ளார். இவரின் இம்முயற்சிக்கு பலர் ஒத்துழைத்துள்ளனர். இதுவொரு கூட்டு முயற்சியே. கூட்டு முயற்சி இருந்தால் பாலாறையும் மீட்க இயலும். மக்கள் மனத்தில் பாலாறு பாய்ந்தது போல் இருக்கும்.

‘ஒரு மண்ணு குடமெடுத்து தண்ணிக்கு போனியே இவ்வளவு நேரமென்ன?’ – ஆண்

‘பாலாற்று தண்ணி சுழன்று வருவதை வேடிக்கை பார்த்தய்யா – பெண்

என்னும் பாடல் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. கண்களிலும் காட்சியாக விரிகிறது.

‘பாலகனைக் கொன்ற பாவம்

தீர்ந்தாலும் தீரும்

பாலாற்றைக் கொன்ற பாவம்

தீரவே தீராது’

என்று ‘தேவையல்ல பெண்கள்’இல் யாழினி முனுசாமி எழுதிய ‘பாலாற்றுச் சாதம்‘ கவிதையே முடிவில் நினைவிற்கு வருகிறது.

புத்தர் சிரித்தார் என்று அணுகுண்டு வெடிக்க சங்கேத வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. மீண்டும் அணுகுண்டுகள் வெடிக்கிற போது புத்தகம் மீண்டும் சிரித்தார் என்ற சங்கேத வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன ஆனால் புத்தர் அழுதார் என்று இந்தப்படத்திற்கு பேர் இருக்கிறார்கள் புத்தா வீப்ஸ் என்கிறார்கள் அது சாதாரண அழுகையல்ல. விம்மிவிம்மி அழுவது. ஜார்க்கண்ட்

பகுதி மக்கள் அங்கிருக்கும் கனிம வளம் அவர்களுக்கு சாபம் என்று இருக்கிறார்கள் அந்த கனிமவளத்தின் காரணமாக அவர்கள் அங்கிருந்து துரத்தப்படுகிறார்கள். பிரிட்டிஷ் காலத்தில் இருந்த சுரங்கங்களின் தன்மை சொல்லப்படுகிறது. ஜாகுடா போன்ற பகுதிகளில் இன்று இருக்கும் சுரங்கங்கள் காட்டப்படுகிறது. யுரேனியம் கழிவு சிறு ஆறு போல ஓடுகிறது அப்பகுதிகளும் சுற்றியுள்ள பகுதிகளும் எப்படி கதிர்வீச்சால் பாதிக்கப்படுகிறது. அது தெரியாமல் விளையாடும், மகிழும் குழந்தைகள்,, வேலைக்குப் போகும் சாதாரண மக்கள். எந்த நிவாரணம் என்று இல்லாமல் அவர்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது. சுரங்கங்கள் வெடி மருந்து வைத்து தகர்க்கப்படுகின்றன.. நல்ல காலுறையும் கையுறையும் கூட அவர்களுக்கு தரப்படுவதில்லை.. கொடுக்கிற முகக் கவசங்களையும் பலர் அணிவதில்லை.. பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் அவர்களுக்கு ஏதோ மருத்துவ பரிசோதனை நடைபெறுகிறது. அங்கு நிகழ்கிற கதிர்வீச்சு மக்களை பாதிக்கிறது. குழந்தைகளை பாதிக்கிறது. பெண்களை பலவீனமாக்குகிறது. பெரிய தலை, சூம்பிய கால்கள், சிறிய தலைகள் என்று குழந்தைகள் பிறக்கின்றன மனரீதியாக அவர்கள் சோர்வடைகிறார்கள், குழந்தைகள் அழுகிறார்கள். கருக்கலைப்பு அதிகமாக உள்ளது.புத்தர் அழுது கொண்டிருக்கிறார் என்று இந்த படம் சங்கேத வார்த்தைகளால் முடிகிறது மக்களின் கனிமவளம் பூமியில் அது சார்ந்த சுரண்டலும் அவர்களின் வாழ்க்கை பாதிப்புகளும் இந்த படத்தில் காட்டப்படுகிறது

அல்மா: இந்த படத்தில் விலங்குகள் கூட்டமாக வாழ்வது மற்றும் அவற்றின் தனித்த இயல்புகள் சொல்லப்படுகின்றன. எப்படி காட்டு-யிர்கள் அழிக்கப்படுகின்றன. வேட்டையாடப்படுகின்றன அவற்றின் மூலம் லாபம் சம்பாதிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. விங்கும் நமக்குமான உறவு என்பது என்றைக்கும் தொடர்ந்து கொண்டிருப்பதை இந்த படம் காட்டுகிறது

"கிரீன்" என்ற படம் ஒரு மனித குரங்கை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கிறது. படுக்கையில் அந்த குரங்கு தூங்குகிறது விழிக்கிறது. விளையாடும் இயல்பை பற்றி நினைக்கிறது. பெரும் மரங்கள் அசைந்து வெளிப்படுத்தும் சத்தங்களும் காற்றும் ஆசுவாசமாக இருக்கிறது. அவை வெட்டப்படுகின்றன அவைகள் பெட்டிகளாகின்றன காகிதங்களை உருவாக்குகிறார்கள் மரத்துண்டில் இருக்கும் நுண்ணுயிர்களை சாப்பிடும் குரங்குகள் மகிழ்ச்சியாக இருக்கிறன. காட்டு உயிர் வாழ்க்கையும் அவர்கள் மகிழ்ச்சியும் காட்டப்படுகிறது. படுக்கையில் கிடக்கும் மனித குரங்கு.. அதையொட்டி

காடுகள் மனிதர்கள் என்று தெரிந்ததை சொல்கிறது. கூண்டில் அடிபட்ட விலங்குகள் பிராணிகள் போலவும் மனிதர்கள் இருக்கின்றனர். மரங்கள் அழிக்கப்படுகிற போது தாவி திரிய மரமில்லாமல் தத்தளிக்கும் குரங்குகள் காட்டப்படுகின்றன. மரம் வெட்டப்பட்டு காகிதழ் கூழ் செய்யப்படுகிறது. செய்தித்தாளாகிறது. புத்தகம் ஆகிறது அவைகள் எல்லாம் கால்கள் மிதிபட வீணான பொருளாகின்றன காடுகள் எரிகின்றன். சின்ன செடிகளை கூட வெட்டி நாசமாக்கி பாதைகளை உருவாக்குகிறார்கள். பார்ம் ஆயிலின் தேவையை உணர்ந்து காடுகள் அழிக்கப்படுகின்றன. காற்று மாசடைய தொழிற்சாலை பெருகி வர பசுமை அழிக்கப்படுகிறது துணையில்லாமல் மரங்களில் ஆடி சலித்துப் போகிற குரங்கு கீழே விழுந்து இறந்து போகிறது.முன்பு அதை பல நாள் படுக்கையில் வைத்து சிகிச்சை அளிக்கிறார்கள். பலன் பெறுவதில்லை இந்த குரங்கின் சாவை முன்வைத்து அமேசான் காடுகளில் இருக்கிற மரங்கள் வெட்டப்படுவதும் காடு அழிவதும் பற்றி ரொம்ப நெகிழ்வாக இந்த படம் சொன்னது

இதில் கலந்துகொண்ட பார்வையாளர்கள் பல கருத்துக்களை முன் வைத்தார்கள்: : இந்தோனேசியாவில் மட்டுமல்ல உலக அளவிலும் இதுபோன்ற காடழிப்புகள் உள்ளன. நிலவில் கால் வைத்து நடக்கிற மனிதனுக்கு கிடைக்கும் உரிமையும் ஒப்பந்தங்களும் நோக்கங்களும் அனைவருக்கும் தெரிந்து விட்டது என்றார் பியூசிஎல் கோபி

மணல் லாரியில் கசியும் நீர்.. அது மணலின் கண்ணீர் என்றார் திலிப்குமார் அவர்கள். மரம் வெட்டப்படும் போது வீழும் இலைகள் தற்கொலை செய்கின்ற போக்குவரத்து என்று இவர் சொன்னார். உலக அரசியல் உள்ளூர் அரசியல் எல்லாம் கட்டப்படுகிறது கிரீன் படத்தில் குரங்கின் நிலையை ஒட்டிய காட்சியை விவரித்து ஒரு பத்திரிகையாளர் அழத்துவங்கிவிட்டார் இயற்கை அழித்தது பற்றி எல்லோருக்கும் கவலையினை இந்த படம் காட்டுகிறது குரங்குக்கு தன்னை பொருத்திக் கொள்ள இயற்கை தவிர வேறு இடமில்லை அப்படி இல்லாத போது தானே வாழ்க்கையை முடித்துக் கொள்கிற அவலம் காட்டப்படுகிறது.

சுப்ரபாரதிமணியனின் பசுமை: வெண்மையும் கருப்பும் என்ற நீள் கவிதைகளை மனதில் கொண்டு வந்து இப்பட மையங்களை நினைவூட்டிக் கொண்டேன் .

கலை இலக்கியப் பெருமன்றம்,, பியூசிஎல் கோபி இந்த விழாவை சிறப்பாக்கினர்

– – – – –

# திருப்பூர் குறும்பட ஆவணப்பட விழா 2023

கனவு திரைப்பட இயக்கத்தின் சார்பாக ஜுலை மாதத்தில் திருப்பூர் மாவட்ட பகுதியைச் சேர்ந்த குறும்பட இயக்குனர்களின் குறும்படங்கள் திரையிடப்பட்டு ஒரு விழா நடத்தப்பட்டது .

சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியில் செப்டம்பர் மாதம் இதே போல ஒரு ஆவணப்பட பயிற்சியும் ஆவணப் படங்கள் மற்றும் குறும்படங்கள் திரையிடல் செப்ட்ம்பரில் நடைபெற்றது. சென்னை சார்ந்த ஆவணப்படை இயக்குனர் ஆர்பி அமுதன் அவர்கள் இதை முன்னின்று நடத்தினார் இதில் இடம்பெற்ற சில படங்கள் பற்றி;

" "ஜு "மனிதர்கள் இயல்பு எப்படி இருக்கிறது அவற்றின் தத்துவார்த்தை வெளிபாடுகளை ஒரு மிருக காட்சி சாலை மூலமாக சொன்ன படம் இது. இந்த படத்தில் ஸ்கிரிப்ட் முறையாக கிடையாது. ஆனால் ஒரு சின்ன மையத்தை எடுத்துக்கொண்டு விரிவாக்கப்பட்டு இருக்கிறது மனிதன் மிருகம் இவை இரண்டும் ஒரே மாதிரி தான் செயல்படுபவை மிருகம் பார்க்கும் பார்வை இதில் மனிதர்கள் கம்பிகளுக்குள் இருப்பது போல கோணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கலாபூர்வமாக மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள உறவுகள் பற்றிய விஷயங்களை இந்த படம் சொல்கிறது இயல்பும் உண்மையும் அழகியலும் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த படம் வெளிவந்து சுமார் 75 ஆண்டுகள் ஆகிறது .

நெய்பர் என்ற அனிமேஷன் படம். இந்த படத்தில் வீடுகள் கட்டமைக்கப்படுகின்றன இரண்டு பேர் உட்கார்ந்து போர் சார்ந்த செய்திகளை படித்துக் கொண்டும் புகைபிடித்து கொண்டும் இருக்கிறார்கள் அங்கே மலரும் பூ யாருக்கு சொந்தம் என்று சர்ச்சை வருகிறது தங்கள் பகுதி தங்கள் சொத்து நிலம் சார்ந்தது என்ற ஒவ்வொருவரும் அதை சொல்லிக் கொள்கிறார்கள். பொருள் மீது வெறுப்பு வருகிறது. முழுக்க விரோதம் வருகிறது. அடித்துக் கொள்கிறார்கள்.சாகிறார்கள். கல்லறைகள் தனித்தனியாக அவர்கள் இடங்களில் உருவாகின்றன. அந்த கல்லறைகளுக்கு முன்னால் அதேபோன்று பூக்கிறது ." பூப்பூத்தல் அதன் இஷ்டம் போய் பார்த்தல் நம்மிஷ்டம் " என்ற வண்ணதாசனின் கவிதை ஞாபகம் வருகிறது .முதல் காட்சியில் செய்தித்தாள் படிப்பவர்கள் படிக்கிற

இரண்டு செய்தித்தாள்களின் விவரம் எப்படி உள்ளது என்று ஒரு செய்தி தாள் சொல்கிறது இன்னொரு செய்தித்தாள் போர் சமாதானம் வாழ்க்கை தேவை என்கிறது. இது குறியீடாக இந்த படத்தில் அமைந்து மனிதர்கள் அன்போடு இருக்க வேண்டும் போரை தவிர்க்க வேண்டும் என்பதை நகரும் காட்சிகள் மூலமாக சொல்கிறது. இது அந்த வகையில் ஒரு அனிமேஷன் படம் என்பதை பல கோணங்களில் சிந்திக்கலாம். மனித உருவங்கள் என்றாலும் அவற்றின் இயக்கம் துண்டாக வெட்டப்பட்டு உருவாக்கப்பட்ட அதன் மூலமாக ஒரு அனிமேஷன் உருவாகி இருக்கிறது

அடுத்த படம் பெயிண்டெட் ரெயின்போ : நகரும் இமேஜ்கள் மூலமாக உருவாக்கப்படும் சித்திரங்கள். இந்த படத்தில் அமைந்திருக்கிறது. ஒரு வீடு வயதானவர்கள் இருக்கிறார்கள் பூனை மீன் தேடி அலைகிறது . மழை பெய்து கொண்டிருக்கிறது வயதானவர்களும் பெண்களும் தங்கள் வேலையைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இன்னொரு உலகத்தில் அவர்கள் செல்கிற போது இந்த கருப்பு வெள்ளை படம் வர்ணப் படமாக மாறுகிறது. காணப்படும் தீப்பட்டிகளுக்குள் அந்த மனிதர்கள் நுழைந்து அங்கு இருக்கிற வாகனங்களை ஓட்டுகிறார்கள். விளையாடுகிறார்கள் கற்பனை களத்தில் திளைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த இரு வேறு நிலைகளும் கருப்பு வெள்ளை படமாகவும் வர்ண படமாகவும் இரு பகுதிகளாக இந்த படம் காட்டியது .ஒரு உள்ளூர் கதை என்பது உலகளாவிய கதையாகி விரிவாவதை இந்த படம் சொல்கிறது. பெண்களின் சாதாரண உலகம் இருக்கும் பகுதி கருப்பு வெள்ளைக்குள் வீட்டுக்குள் காட்டப்படுவது. அந்தப் பெண்ணின் கற்பனை உலகத்துக்குள் வருகிறபோது வர்ணத்தில் காட்டப்படுவது ரொம்ப விசேஷமாக இருக்கிறது. கீதா கீதாஞ்சலி அய்யர் என்பவர் இயக்கிய இந்த படம் முழுக்க வசனங்கள் அற்று இருக்கிறது. ஒரு புதிய பார்வையை வாழ்க்கை பற்றி தருகிறது

வைட் ஸ்லாம் : சிட்டி ஆப் சாம்பியன் என்பது சென்னை வட சென்னை பகுதி ராயபுரத்தில் இருக்கிற சாதனை புரிந்த கேரம் போர்டு விளையாட்டு காரர்கள் பற்றிய படம். வறுமையில் இருக்கிறார்கள். சமூக விரோதிகள் பகுதி என்று சொல்லப்படுகிறது. காவல்துறை வஞ்சிக்கிறது. ஆனால் அங்கு கேரம் ற்றுக் கொடுக்க பல இருக்கிறார்கள் விளையாட்டை தெரிந்து கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறார்கள். கேரம் விளையாடுகிறார்கள் சுமார் நூற்றுக்கணக்கான பேர் அகில இந்திய அளவில் கேரம்போர்டு விளையாட்டு வீரர்களாக பயணம் செய்வதை இந்தப் படம் சொல்கிறது. இது அவர்களுக்கு வேலை வாய்ப்பாகும். மனதில் இருந்து பயத்தை ஒரு வெட்டிவிட்டு திறமை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு

முன்னேற்றும் விஷயங்களையும் சொல்லி வாழ்க்கையில் விளையாட்டும் சாதனைகளும் தான் மாறுதலை அளிப்பதை படம் சொல்கிறது

”பாலை“ இந்த படம் குறும்படம் இல்லாமல் ஆவணப்படம் அல்லாமல் இரண்டும் இணைந்த ஒரு ஹைபிரிட் வடிவத்தைக் கொண்டிருந்தது. மூன்று பகுதிகளை கொண்டிருந்த இந்த படத்தின் முதல் பகுதி காதல் என்ற தலைப்பில் உள்ளது. இறந்து போன ஒருவருடைய ஆன்மா பேசுவது போல அவன் இறந்த போன பின்னால் அவன் மனைவியை சோகமாக பார்ப்பது அவனுக்கு பிடிப்பதில்லை என்று ஆரம்பிக்கிறது .ஆனால் அவரை தெரியாது பெற்றோர் சொன்னதால் திருமணம் செய்து கொள்கிறாள் அந்தப் பெண்

இரண்டாவது பகுதி பிரிவு. கணவன் வெளிநாடு போய்விட்டான் இருக்கிற பணத்தை எல்லாம் சேமித்து கொண்டு செல்வழித்துப் போகிறான். ஆனால் போனவன் சில சமயம் பணம் அனுப்புகிறான். 12 மணி நேர வேலை.கொஞ்ச நாளில் சம்பளம் இல்லாமல் போகிறது. இறந்து போகிறான் காவல்துறையின் அத்துமீறலால் தூக்கு போட்டு செத்துப் போவதாக சொல்கிறார்கள். திருட்டு நடந்ததால் அவனை விசாரித்ததாக காவல்துறை சொல்கிறது .எப்படியோ அவன் இறந்து போகிறான் இறப்புக்கு பின்னால் அவருடைய உடம்பை வாங்குவதற்கே கடன் பட்ட பெண் பல்லாயிரம் ரூபாய் அனுப்பி செலவு செய்து அவனுடைய உடம்பை வாங்குகிறாள் .உடம்பு வருகிறது சாம்பல் ஆகிறான். கடன் தர யாரும் இல்லாதபோதும் அவள் செலவு பண்ணுகிறாள் இறந்தபோதும் சார்ந்த சடங்குகள் பூஜைகள் நடக்கின்றனம் துபாயில் நடந்த சாவு. இங்கு சாம்பலாகிப் போனது சாம்பலாகிப் போனவனே கதை சொல்கிறான். கதை கேட்டவர் எல்லாம் சொர்க்கம் போவார்கள் என்று ஒரு கூத்து வசனத்தோடு படம் முடிகிறது. இடைஇடையே இந்தக் கூத்து இந்தக் கதையைச் சொல்கிறது. அந்த வீட்டு குழந்தைகள் எல்லாம் அப்பா கடவுள் ஆகிவிட்டார் என்று நம்புகிறார்கள் ஒரு பகுதி கூத்து பாடல் தன்மையும் இன்னொரு பகுதி நடப்பு சம்பவங்களாலும் நிறைந்த படம். அந்த படத்தின் காட்டுப் பகுதி, தோட்டப்பகுதிகளும் பாலைவனமும் என்று மாறி மாறி காட்டப்படுகிற பாலை இடங்களும் பின்னணியில் ஒலிக்கிற துயரம் மிகுந்த பெண்ணின் குரலும் மனதை சிரமப்படுத்துவதாக இருந்தது.

– – – – –

## மௌனமே பாஷையாக .... அமுதஜீவன்

சினிமாவிற்கு இலக்கியம் போன்று சிறந்த மதிப்பும் இறவா வரமும் உள்ளதா.. இலக்கிய ரசனை போல சினிமா ரசனை சாத்தியமா என்றெல்லாம் விவாதிப்பதை விட சினிமா ரசனையை பரந்து பட்ட தளத்திற்கு எடுத்து செல்ல முடியுமா என்ற சோதனை முயற்சியே 13/15-10.2023 அந்தியூர் வெள்ளிமலை நித்யவனத்தில் நடைபெற்ற திரைப்பட ரசனை பயிற்சி முகாம்.

ஆர்வலர்கள் கலந்து கொண்ட முகாமை இஸ்மாயில் ரபீக் மற்றும் அஜிதன் நெறிப்படுத்தினார்கள். சினிமாவின் தோற்றம் வரலாறு ஊமைப்படம் பேசும்படம் சினிமாவின் போக்குகள் புதிய யதார்த்த வாத படங்கள் நவீன சினிமா திரைமொழி சினிமா இரசனை என சினிமா குறித்த பல அடிப்படை தகவல்களை தொகுத்து விளக்கம் தருவதாக பயிற்சி சிறப்பாக அமைந்தது. முதல் நாள் ரேயின் பதேர் பாஞ்சாலி திரையிடப்பட்டது. படம் குறித்த விரிவான உரையாடல் மறுநாள் காலை தொடர்ந்தது.

படத்தின் சிறப்பை படைப்பாளியின் மேன்மையை புரிந்து கொண்டது மட்டும் அல்ல ஒரு சினிமாவை எவ்வாறு இரசனையுடன் வாசிப்பது என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டனர். : இரண்டாம் நாள் வணிக படங்கள் கலைப்படங்கள் உலகின் மிகச் சிறந்த இயக்குனர்களின் படங்கள பற்றி அஜிதனின் அறிமுக உரையுடன் பங்கேற்பாளர்களின் கலந்துரையாடல் உடன் பயிற்சி. பின் ருஷ்ய இயக்குனர் ஆந்தரே தஸ்தவேஸ்கியின் Mirror படம் காண்பிக்கப்பட்டது. மரணப்படுக்கையில் இருப்பவரின் நினைவாக கனவுகளாக இழைந்த படம்.முதல்முறை பார்த்து தெளிதல் சாத்தியம் இல்லை என்றாலும் படத்தின் அழகியலும் பூடகமான மொழியும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சினிமா பொழுது போக்கு சாதனமல்ல. அது மனித இரசனையை மானுட விடுதலையை மேம்படுத்தும் கலையாக சிறக்க வேண்டும் என்பதற்கான அக்கறை இந்த முகாம் இது போன்ற தொடர் முயற்சிகள் இரசனை மேம்படுத்தலில் அவசியம் என்பதை அனைவரும் ஏற்றனர்.

## 0 நாணல் - குறும்படம் அழகு பாண்டி அரசப்பன்

சுப்ரபாரதிமணியன் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆனந்த விகடனில் எழுதிய " பாதுகாப்பு " என்ற சிறுகதையை நாணல் என்ற பெயரில் குறும்படமாக்கியிருக்கிறார். அவரின் கதைகள் முன்பே ஆறு குறும்படங்களாகி உள்ளன. அயலான், இன்று நேற்று நாளை இயக்குனர் ரவிகுமார், பேரெழில் குமரன், எஸ் எல் முருகேஷ் போன்றோர் அந்தக் குறும்படங்களை இயக்கியிருக்கிறார்கள். இந்த முறை சுப்ரபாரதிமணியனே இயக்கியிருக்கிறார்.

குறும்படம் என்றதும் ஏதோ நீதி போதனை குறித்த வகுப்பு என்று எண்ணிக்கொண்டு அந்தப்பக்கமே போகாமல் புறக்கணித்தவன் நான். குறும்படம் திரைப்படம் இரண்டுமே நமக்கானதல்ல என்று ஒதுங்கியே வந்திருக்கிறேன்.ஓரமாய் ஒதுக்கியே வைத்திருக்கிறேன்.ஆனால் நானே எழுதியுமிருக்கிறேன் ஒரு நல்ல புத்தகம் ஓரமாய் ஒதுங்கியே கிடக்கிறது ஒருவருக்கு அது வாசிக்க கிடைக்கும் வரை என்று. இருந்தாலும் கனவு அவ்வப்போது குறும்பட விழாக்கள் நட்த்துகின்றது திருப்பூரில். சமீபத்தில் சிக்கண்ணாஅரசு கல்லூரி தமிழ்துறை சார்பில் நடந்தேறிய குறும்பட பயிற்சி பட்டறைக்கு ஒரு நல்ல நாளில் செல்ல நேர்ந்ததும் நல்லதுதான்.குறும்படம் என்றால் என்ன? குறும்படங்களின் தாக்கம் திரைத்துறையில் என்னமாதிரியான முன்னெடுப்புகளை தரவல்லது. அதன் தாக்கம் குறித்தும் அறிய முடிந்தது.

சரி இந்த படத்தப்பத்தி பேசுவோமா.....

இன்றைய நவீன அசுர வேக திருப்பூர் சூழலில் ஒரு எழுத்தாளனை முன் நிறுத்தி அவனின் உணர்வுகளை இவ்வளவும் சொல்லத்துணிவதுதான் கனவு சுப்ரபாரதிமணியன் போன்ற மீப்பெரும் எழுத்தாளுமையின் நேர்மை என சொல்லலாம். இதில் என்ன நேர்மை தீமை என்றெல்லாம் பேசலாம்.ஏதோ தொழில் செய்வோரை கதையின் நாயகனாக காட்டிவிட முடியும் சூழலில் தன்னைப்போன்ற ஒரு எழுத்தாளன் தான் தன் கனவு நாயகன் என எழுதவும் ஒரு துணிவு வேண்டும்.அதே நேரம் நான்கே நடிகர்களை வைத்து பதினைந்து நிமிடத்திற்குள் ஒரு கதை சொல்ல கதா விருது வாங்கியவருக்கு தகுதி இருக்கத்தான் செய்யும். நாணல் படர்ந்த இடத்தில் காண்டாமிருகம் வாழ ஆசைப்படுமாம்.

நாணல் வேய்ந்த கூரைகளால் நம் முன்னோர்கள் வீடு கட்டி வாழ்ந்தார்களாம்.நாணல் வளையும் வளைந்து கொடுக்கும் வீழாது. வாழும் கரை காத்து வாழவைக்கும் இதை நமது பழமையான

இலக்கிங்களும் நமது பன்முகதன்மை கொண்ட படைப்பாளியான சுப்ரபாரதிமணியனும் எடுத்துக்கொண்டதில் குறும்படமாய் முன்னெடுப்பதில் மகிழ்வே.

அடுத்த தலைப்பென்ன என கேட்கும் வில்லனுக்கு ஏற்றதாய் “மடியில சாஞ்சா மல்லிகா” என எழுத்தாளனுக்கே உரிய நக்கல் பேச்சில் அவனுக்கான எதிர்பார்ப்பையும் கூறி ஒரு நகைப்பு முரணை காட்டியுள்ளது சிறப்பு. வில்லன் இப்படித்தான் இருக்கனுமென ஒரு கோட்டர் பாட்டிலை தண்ணி கூட கலக்காமல் குடிப்பதாக காண்பித்தது அதிர்ச்சியை தருகிறது.

கொடூர வில்லத்தனத்தை அடையாளங்காட்டுகிறது. ”சிறுக்கி மக சிக்காமலா போயிருவா“ என்பது தேனி வட்டார வழக்கெனில் அந்த வில்லன் யார்?!.... ஒரு கடிதம் எழுத ஆரம்பித்து அதன் மூலம் எழுதி முடிகிற போது கதையும் முடிகிறது. ஒரு எழுத்தாளுமையின் கையில் குறும்படம் சிக்கியது விதி. பெரும்படம் தப்பியது பழைய கதி.

இனி காண விளைவோம் அவரின் திரை மொழி. வசந்தியின் வாழ்க்கை ஒரு பேரனுபவம். பக்கத்து வீட்டு பெண்களோடு பகிர்ந்து கொள்ளும் சிரிப்பு வெறுப்பு பொறுப்பு என அனைத்தையும் ஒரு வயதான எழுத்தாளன் மீது ஒரு இளம் வயதுக்காரி நம்பிக்கைவைத்து அவர் வழி செல்கிறாள் என்பதும்.தன் சுய வாழ்க்கையின் பேராபத்துகளை தன் எழுத்தின் ஒரு கதா பாத்திரம்கூட நெருங்கி பாதிப்பை உணரக்கூடாதென அக்கறைப்படுதல் பிரமிப்பு.மனையாளை இழந்த தன் நண்பனுக்கு மறு பிறவி கொடுக்கும் பிரம்மனாக எனக்கு அந்த எழுத்தாளன் தெரிகிறான்?!.....உங்களுக்கு....

கதையினூடே கிரிஜா சுப்ரமணியத்தின் கைவண்ணமான மாடி தோட்டமும் அதன் பேரழகும் இந்தக்குறும்படம் பார்ப்பவர்களை குறுந்தொட்டம் போட வைக்கும்....சதிராட்டம் ஆட வைக்கும். பின்னணி இசை சிறப்பு.

ஆட்கள் தேர்வு நேர்மை. சிறுகதையை திரைக்கதை வடிவமாக்கியிருக்கும் கிளமண்ட் விக்டர் இந்தப் படத்தில் பிரதான கதா பாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார் என்ன ஆரம்ப அறிமுகங்களில் ஒரு பாட்டு வைத்திருந்தால் எனக்கும் ஒரு ஒரு பாட்டெழுத வாய்ப்பு கிடைத்திருக்கும்.இருந்தாலென்ன அடுத்த முறை எனக்கானதாக இருக்கலாம். இல்லை உங்களுக்கானதாக கூட

( Naanal short film / u tube channel/ crime production channel and subrabharathimanian chl ).....

## திரை நாவல் : யுவராஜ்சம்பத்

பொதுவா உங்க நாவல் எல்லாமே ஏதாவது ஒரு பொது பிரச்சனையே மையமாக வைத்து அதை சுற்றி பின்னப்பட்டிருக்கும்.. ஆனா இது கொஞ்சம் அப்படி இல்லையோ? எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது.

கந்துவட்டி கொடுமை பொருந்தாக் காதல் இந்த இரண்டைப் பற்றியும் ஒரு சின்ன லீடு இருந்தது. நான் கூட அதை விவரித்து பின்னாடி நாவல் பயணிக்கும் அப்படீன்னு நினைச்சேன்.

ஆனா நீங்க செய்யல. ஏன்? போதும் அப்படிங்கிற ஒரு மனநிலையா? எவ்வளவு சொன்னாலும் இந்த சமுதாயம் கேட்காது அப்படிங்கிற ஒரு வெறுப்புணர்வா?? ..

உங்க நாவலை படிக்கிற எல்லாருக்கும் இந்த வித்தியாசம் கொஞ்சம் தூக்கலாகவே தெரியும் அப்படின்னு நினைக்கிறேன்...

கதை இரண்டு சர்வதேச திரைப்பட விழாக்கள் இரண்டு இடங்களில்.. திருவனந்தபுரத்திலும் கோவாவிலும்.

சாதாரண மனிதன் திரைப்பட திருவிழாக்களை எப்படிப் பார்க்கிறான் என்கிற ஒரு மாறுபட்ட பார்வை. திரைப்பட விழாக்களுக்கு தவறாமல் செல்கிற அறிவுஜீவிகளின் பார்வையில் இந்தியத் திரைப்படங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, சர்வதேச திரைப்படங்களை இந்திய திரைப்படங்களுடன் தரத்தில், கதையில், காட்சிகளில், ஒப்பு நோக்குதல் போன்றவை மிக சிறப்பாகவே படம் பிடித்து காட்டி இருக்கிறீர்கள்.

சினிமாத்துறையில் திருப்பூரைச் சார்ந்தவர்களின் பங்களிப்பு கடந்த 50 வருடங்களாக சிறப்பாகவே இருக்கிறது என்பதை உங்கள் நாவலைப் படித்து, அதற்குப்பின்னால் தெரிந்துகொண்டேன்.

எனக்கெல்லாம் மிகப்பெரிய ஆர்வம் இருந்தது .நாமும் ஏதாவது ஒரு நாள் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு சென்று அந்த விழாக்களை ஏன் அறிவு ஜீவிகள் பெரிதாக கொண்டாடுகிறார்கள், அப்படி அங்கு என்னதான் நடக்கிறது என்று பார்க்க ஆவல் இருந்தது. ஆனால் ஒரு பார்வையாளனாக அங்கு செல்லும்பொழுது எப்படியெல்லம் சிரமப்பட வேண்டும். பயணம் முதல் உணவு வரை 4,5 தியேட்டர்களுக்கு நடுவே ஓடுகிற ஓட்டம். இந்த திரைப்படத்தை பார்க்க முடியுமா முடியாதா என்கிற ஏக்கம் .அதை பார்ப்பதற்கு இரவு 12 மணிக்கு எழுந்து ஆன்லைனில் டிக்கெட் புக் செய்ய வேண்டிய

அவலம். இதையெல்லாம் மீறி மொழி தெரியாத சக மனிதர்கள். இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் அங்கு போகத்தான் வேண்டுமா என்கிற கேள்வியை எழுப்பியிருக்கிறது இந்த நாவல்.

வெறுமனே திரைப்பட விழாக்களை மட்டும் முன்னிறுத்தாமல் அந்தப் பகுதி மக்களின் உணவு வகைகள்,, கலாச்சாரம் ,மொழி, சிறப்பு போன்ற எல்லாவற்றையும் உங்களுடைய பாணியிலேயே மிக அழகாக, இயல்பாக, நாவலைப் படிக்க வாசகனின் மனதில் பதியும்படி எளிமையாக சொல்லியிருக்கிரீர்கள். இது உங்களுடைய வழமையான உத்தி என்றாலும்கூட, முழு நாவலையும் படித்து முடித்த பிறகு எத்தனையோ புது வித உணவுகளையும் ,அந்த மாநில மக்களின் கலை ,பண்பாடு போன்றவற்றயும், சினிமா சம்மந்தபட்ட தொழில்நுட்ப வார்த்தைகளையும் தெரிந்து கொண்டேன்.

அந்த விழாவிற்கு நானே சென்று வந்து அவதிப்பட்ட, பிரபுவாக என்னை உணர்ந்து கொண்டேன். மிகச் சிறப்பாக வந்திருக்கிறது இது. உங்களின் மணிமகுடத்தில் மற்றொரு வைரக் கல்லாக ஜொலிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. வாசகனுக்கும் உலக சினிமா பற்றி பொது அறிவு கொடுத்து இருக்கிறீர்கள்.

தமிழ் நாவல் களத்தில் புதிது இது.நாவல்களின் வகைமைகளில், களங்களில் புதிது புதிதாக எடுத்துக் கொள்ளும் உங்களின் முயற்சியில் திரைப்படவிழாக்களின் கோலாகலம் இதில்

(Thirai novel.. Subrabharathimanian, Rs 300 Zero degree publication , Chennai)

# 11வது புதுச்சேரி சர்வதேச ஆவணப்பட குறும்பட திருவிழா

## சுப்ரபாரதிமணியன்

பெரும்பாலும் குறும்பட விழாக்கள் என்பது அந்தந்த பகுதி சார்ந்த ஆர்வமுள்ள இளைஞர்கள், இயக்குனர்கள் இவர்களின் படங்களைத் திரையிடுவது மற்றும் அவர்கள் சார்ந்த விருப்பங்களை நிறைவேற்றுவது என்ற வகையில் அங்கங்கே நடந்து வருகிற போது குறும்பட விழாக்கள் சர்வதேச தரத்தை எட்ட வழிகாட்டும் முயற்சிகள் பேராசிரியர் ஆர் சிவகுமார், ஆர்.பி அமுதன் போன்றோரின் நிகழ்வுகளில் காணப்படுகிறது அந்த வகையில் தான் பேராசிரியர் ஆர் சிவக்குமார் ஒருங்கிணைக்கும் முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் நடத்தும் குறும்பட ஆவணப்பட விழாக்களில் இந்தத் தரத்தை சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

அந்த வகையில் தான் புதுச்சேரியின் குறும்பட விழாவின் படங்கள் அமைந்திருந்தன இவற்றில் ஆர்வம் கொண்டு திரைப்படத்திற்கு செல்லும் முயற்சியில் உள்ள இளைஞர்கள் எடுக்கும் குறும்படங்கள் பளிச்சென்று தெரிகிற வகையில் தேர்வு செய்யப்படுவதும் சிறப்பாகவே இருக்கிறது. அவர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சி என்ற வகையில் "திரை இயக்கம்" என்ற பிரிவையும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்.

திரை இயக்கம் சார்ந்து இளைஞர்களை குறும்படம் நோக்கில் பயிற்றுவிப்பதும் அதன் நிறைவாய் குறும்படங்கள் எடுக்க ஆயத்தம் செய்வதும் முக்கியமான விஷயமாக இருக்கிறது. வழக்கமாக குறும்படங்கள் சார்ந்து இயங்கும் கல்வித்துறை மற்றும் வணிக நிறுவனங்களுடைய பங்களிப்பு ஓரளவு இருந்தாலும் பெரும் பணம் செலவு செய்ய வேண்டி இருக்கிறது இளைஞர்களுக்கு அப்படி அடிப்படை திரைப்படக் கல்வி சார்ந்த படிப்பை பெரும்பாலும் முன்னிலைப்படுத்தாமல் அவர்களுடைய ஆர்வத்தையும், வாசக மனதினையும் கொண்டு ஓராண்டு பயிற்சிகள் மூலம் திரைப்படமாக்கும் முயற்சிகளை ஊக்குவிக்கும் மூலமாக சில குறும்படங்கள் திரை இயக்கம் மூலம் வெளிவந்திருக்கின்றன. திரை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் நடிகை ரோகிணி, எடிட்டர் லெனின் போன்றோரின் ஈடுபாடும் முக்கியமானவை. அந்த வகையில் சுந்தர் ராமசாமி அவர்களின் ஜன்னல் என்ற சிறுகதை குறும்படம் ஆகி இருப்பதை இவ்விழாவில் முத்திரையாகத் திரையிட்டார்கள்.

முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் சார்ந்த படைப்பாளிகளின் படைப்புகளை எடுத்துக் கொண்டு குறும்படங்கள் ஆக்கி இருக்கலாம். ஆனால் தமிழில் குறிப்பிடத்தக்க இன்னொரு வகை படைப்பாளியாக இருந்த சுந்தர ராமசாமியின் சிறுகதையை எடுத்ததற்கு காரணமாக குறைந்த கதாபாத்திரங்களும் அதனால் கட்டமைக்கப்படும் குறைந்த செலவில் ஆன காட்சிகளும் காரணமாக இருந்திருக்கலாம்.. என் ஆறு சிறுகதைகளை பலர் குறும்படங்களாக ஆக்கி இருந்தாலும் நானே சமீபத்தில் இயக்கிய "நாணல்" என்ற குறும்படம் ஆனந்த விகடனில் வெளிவந்த "பாதுகாப்பு" என்ற சிறுகதையை மையமாகக் கொண்டிருந்தது இந்த கதையை நான் எடுத்ததற்கு காரணம் குறைந்து செலவில், குறைந்த கதாபாத்திரங்கள் என்ற ரீதியில் தான் மனதில் முதலில் வந்தது, அப்படித்தான் ஒரு சின்ன முயற்சியாக குறைந்த கதாபாத்திரங்களும் அவர்களின் நிகழ்வுகளும் மிக எளிமையாக சொல்ல முடிந்த லாவகம் அந்த "சன்னல்" (ஜன்னல் கதை சன்னல் என குறும்படத்தில்) குறும்படத்தில் கூட்டு இயக்கத்தில் தென்பட்டது. ஆரம்பகால முயற்சிகளுக்கு இது போன்ற குறைந்த கதாபாத்திரங்களும் குறைந்த நிகழ்வுகளும் உள்ள கதைகள் பயன்படும் என்பதற்கு உதாரணமாக "சன்னல்" படத்தை சொல்லலாம்.

முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தை சேர்ந்த எழுத்தாளர்களின் குறும்படங்கள் பல்வேறு நிலைகளில் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. அந்த நிலையில் அமைப்பின் முக்கிய எழுத்தாளர் கோவை கரீம் அவர்களின் இரு கதைகளை மையமாகக் கொண்ட இரு குறும்படங்கள் இவ்வாண்டில் திரையிடப்பட்டது முக்கியமான நிகழ்வாகும். "முதல் கேள்வி" என்ற அவருடைய சிறுகதை "தாழிடப்பட்ட கதவுகள்" என்ற சிறுகதை தோப்பில் இடம் பெற்றிருக்கிற ஒரு பெண்ணுக்கு ஏன் அவள் சார்ந்த முஸ்லிம் அமைப்பின் வட்டத்தில் குறிப்பிட்ட வகைஉரிமையை தரக்கூடாது என்ற ஒரு பெண் எழுப்பும் கேள்விகளும் அந்த பெண் சார்ந்த பிற பெண் கதைபாத்திரங்களும் சரியாகவே உருவாக்கப்பட்டு இருந்தன..

அதுவும் கருப்பு வெள்ளையில் அந்த படம் இன்னும் அழுத்தமான பாதிப்புகளைத் தந்து பெண் என்பவள் ஆணின் அடுத்த நிலையில் இருந்து பார்க்கப்படும் தன்மையை சரியாக வெளிப்படுத்தி இருந்தது. கரீம் அவர்களின் இன்னொரு சிறுகதை "இன்று தஸ்தகீர் வீடு" (கருப்பு அன்பரசன் இயக்கம்) இது முஸ்லிம் சிறுபான்மை சமூகம் சார்ந்து இன்றைக்கு காவல்துறையும் அரசு அதிகாரமும் அவர்களை சந்தேகக் கொண்டு பார்க்கும் விசாரணைப் பார்வையை அது சார்ந்த அடிப்படை

உரிமைகளை கேள்விக்குறியாக்கியிருந்தது ஜெயச்சந்திரா ஹஸ்மி இயக்கிய "ஸ்வீட் பிரியாணி" என்ற குறும்படத்தில் உணவு விநியோகம் செய்யும் ஒரு ஊழியரின் ஒருநாள் அனுபவங்களை சொல்கிற போது அவர் சார்ந்த சாதி பலரை எப்படி துன்புறுத்துகிறது.

மனதளவில் என்பதை காட்டியது சுரேஷ்குமாரின் அரிதாரம் போன்ற குறும்படங்கள் இன்றைய சமூக ஊடக பாதிப்பான சமூகத்தில் தடுமாறும் கலைஞர்கள் பற்றிய அக்கறையை மற்றும் நம்பிக்கை இழப்பையும் ஒரு சேர சொன்னது.. ஸ்கூல் பெல் போன்ற மூன்று நிமிட படங்கள் சொல்லும் செய்திகள் குழந்தை உழைப்பு சார்ந்த பல கேள்விகளை உருவாக்கும். சாய் இயக்கத்தில் திரையிடப்பட்ட "லாட்டரி டிக்கெட்" என்ற படம் அது பாதிக்கும் ஒரு குடும்ப சூழலை சொன்னாலும் அது லாட்டரி சார்ந்த விமர்சன குறிப்பை தவறவிட்டது. கரீம் சிறுகதைகள் தொட்ட பிரச்சனைகளை இலங்கையில் இருந்து ஆத்மா சபீர் அவர்கள் இயக்கிய "நொச்சிமுனை தர்கா" என்ற ஆவணப்படம் அந்தப் பகுதியில் பல்வேறு சாதி, இன மக்கள் சேர்ந்து வாழ்ந்த காலகட்டத்தையும் இன்று அவர்களின் பிணைப்பு காணாமல் போயிருக்கும் விரோதத்தையும் சரியாக சொல்லி இருக்கிறது.

பொதுவாக இது போன்ற திரைப்பட விழாக்களில் அதிகபட்சமான எண்ணிக்கையில் குறும்படங்களை பார்க்க ரசிகர்கள் விருப்பப்படுவதுண்டு. ஆனால் நீண்ட ஆவணப்படங்கள் இது போன்ற விழாக்களில் இடம்பெற்று அந்த விருப்பங்களை சரியாக நிறைவேற்ற முடியாமல் செய்துவிடும். ஆனால் அந்த ஆவணப்படங்களின் சொல்லும் தன்மையும் களமும் அப்படி விரிவாகத்தான் சொல்லப்பட வேண்டும் என்பதை இந்த விழாவில் திரைப்யிடப்பட்ட பல படங்கள் உணர்த்தின. அட்மிட்டட் என்ற பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் முதல் திருநங்கை மாணவர் பற்றிய படம் ,டேர்ன் யூ ஆர் பாடி டு த சன் என்ற இரண்டாம் உலகப் போரின் போது பிடிக்கப்பட்ட சோவியத் சிப்பாயின் வாழ்க்கை கதை, முற்றிலும் பெண்களால் நடத்தப்படும் தலித் செய்தி நிறுவனம் சார்ந்த அதில் பங்கு பெற்ற பத்திரிகையாளர்கள் பற்றிய ரைட்டிங் வித் ஃபயர், எத்தியோப்பியாவின் விவசாய குடும்பங்களில் காணப்படும் இயற்கை பாரம்பரிய பிரசவ முறைகள் பற்றியது போன்றவை இந்த வகையில் நீண்ட ஆவணப்படங்கள் தான்.

ஆனால் அவற்றின் களம் சார்ந்து அவை விரிவாக சொல்லப்பட வேண்டிய அவசியத்தையும் இந்த படங்கள் உணர்த்தின. தேனீக்கள் இல்லாமல் போன உலகத்தில் மனித இனம் இருக்குமா என்ற கேள்வி

தொடர்ந்து எழும்பிக் கொண்டே இருக்கிறது. இதை சொன்ன பீ டேல்ஸ் என்ற குறும்படம் சுற்றுச்சூழல் சார்ந்து நிறைய கேள்விகளை உருவாக்கியது. இதே போல் இன்று தனியார் மையத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்ற பொதுத்துறை நிறுவனங்களை மீட்டெடுக்கிற போராட்டம் எவ்வளவு முக்கியம் என்பது தமிழ்நாட்டின் பொது போக்குவரத்து பேருந்துகளின் முக்கியத்துவத்தை முன்வைத்து எடுக்கப்பட்ட "எஞ்சின் ஆப் த தமிழ்நாடு " என்ற படம் சரியாகச் சொன்னது. மக்களின் எழுச்சியும் போராட்டங்களும் காலத்திற்கு ஏற்ற மாறி விடும் அதற்கு அதிகாரத்தின் குரல் அடிபணிந்துதான் தீரும் என்பதை "மை இமேஜனரி கண்ட்ரி" என்ற சிலி நாட்டு நீண்ட ஆவணப்படம் உணர்த்தியது . "ரைடர் ருக்மணி" என்ற தமிழ் படம் வாகனத்தில் தன் பயணத்தை தொடர்ந்து அனுபவங்களை பதிவு செய்து கொள்கிற ஒரு இளம் பெண்ணின் கோணத்தில் ஆவணப்படமாக சொல்லப்படாமல் அதில் உடைசார்ந்து புறக்கணிக்கப்படும் ஒரு சாதாரண மனிதனின், திரைப்பட போஸ்டர்களை ஒட்டும் ஒரு தொழிலாளியின் அனுபவங்களை இணைத்து சொல்லியிருந்தது ஆவணப்படத்தில் இன்னொரு புனைவு கோணத்தையும் கொண்டு வந்திருந்தது புதுமையாய். இதே போல அனிமேஷன் படங்களின் பங்களிப்பு இன்று திரைப்படங்களில் முக்கியமானதாக மாறிவிட்டது.

அதனால் தான் இந்த பட விழா "மிக்ஸி" என்ற ஒரு அனிமேஷன் படத்துடன் துவங்கியது. கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தையின் உழைப்பு மற்றும் பாரம்பரிய விதைகள் மற்றும் உணவுகள் பற்றிய எண்ணங்களை சொன்னதிலும் ஒரு புதிய கோணம் கிடைத்தது. அதேபோல பிரெஞ்சு ரோஸ்ட் என்ற ஒரு அனிமேஷன் படத்தின் தன்மையும் இன்னொரு கோணத்தில் விளக்கப்பட்டிருந்தது. எல்லா வகைமைப்படைப்புகளையும் திட்டமிட்டு உட்படுத்தியதில் விழாவின் பரிமாணம் வித்தியாசமாகிவிட்டது.

சுமார் பத்து நாடுகளின் இருந்து வந்த இந்த திரைப்படங்கள் தமிழ் குறும்பட ஆவணப்பட பார்வையாளர்களை சர்வதேச தரத்தில் அமைந்த படங்களின் நோக்கங்களை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தன என்பதுதான் சிறப்பு. ஆனால் மூன்று நாட்கள் மட்டுமே என்பது இதுபோன்ற விழாக்களில் சில சமயம் திருப்தி தராத அதிர்ச்சியை ஏற்படுத்தும். அந்தந்த ஆண்டுகளில் வந்த இது போன்ற தீவிரமான படைப்புகளை உடனுக்குடன் பார்வையாளர்கள் பக்கம் கொண்டு சேர்த்திருப்பதில் இது போன்ற ஆவணப்பட குறும்பட திருவிழாக்கள் முக்கிய பங்கை முன் வைக்கின்றன.

## சில உலகப் படங்கள்:
## த மான் ஹூ சொல்டு ஹிஸ் ஸ்கின்
## / துனிசியா நாட்டு படம்

இன்றைய நுகர்வு கலாச்சார உலகில் உடம்பு என்பது குறிப்பாக பெண்களின் உடம்பு என்பது நுகர்வுப் பொருளாகவும் விளம்பரப் பொருளாகவும் மாறிவிட்டது இதில் ஆண் உடலை அவ்வாறு ஆக்குவது என்பது பல நவீன உலக விசயங்களில்சாதாரணமாகிவிட்டது. அதில் ஒன்று ஆண்களை பெண்கள் பயன்படுத்தும் விபச்சாரம். அப்படித்தான் ஆண் உடலை குறிப்பாக முதுகை ஒரு விளம்பரத்திற்காக பயன்படுத்தும் ஒரு சமூகம், ஓவிய குழு பற்றிய சர்ச்சையை இதை படம் எழுப்பியிருக்கிறது சாம் அலி ஒரு பணக்கார பெண்ணைக் காதலிக்கிறான் அப்போது அங்கு சிரியாவில் நடக்கும் போரில் இருந்து தப்பிக்க தனது நாட்டைவிட்டு தப்பித்துப் போகிறான் அங்கே அவன் வேலை இல்லாமல் சிரமப்படுகிறான் அவன் முதுகை ஒரு ஓவியர் விளம்பரத்துக்காக பயன்படுத்த கேட்கிறார்.

அவனும் ஒத்துக்கொண்டு அதைச் செய்கிறான். அவனின் முதுகில் செங்கண் விசா சின்னத்தை சர்ச்சைக்குரிய ஓவியர்களால் பச்சை குத்தப்பட்டு விளம்பரப் படுத்தப் படுகிறான். அவனின் உடம்பு ஓவிய கண்காட்சி போல ஆகிவிடுகிறது. அவனை ஒரு மியூசியத்தில் உட்காரவைத்து அதை வேடிக்கைப் பொருளாகப் பார்க்கிறார்கள் அவனின் உடம்பின் வேறு வடிவங்களாக படங்களாகவும் , சிற்பங்களாகவும் முதுகும் பலரின் பார்வையாளர்களுக்கு விருந்தாகிறது. அதனால் அவனுக்கு நிறைய பணம் சன்மானமாய் வருகிறது. சிரியாவில் இருக்கிற தனது அம்மா மற்றும் சகோதரிகளுக்கு அந்த பணத்தை அனுப்புவதால் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் தன் உடம்பை இப்படி ஒரு கவர்ச்சிப் பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் மாற்றி இருப்பது அவனுக்கு பல சமயங்களில் உறுத்தலாக இருக்கிறது.

அதை அவன் புறந்தள்ளிவிட வில்லை அதனால் அவனுக்கு கிடைத்திருக்கிற சொகுசான வாழ்க்கையும் பணமும் அவனை அதற்குள்ளேயே இருக்க வைக்கிறது சிரியாவில் இருக்கிற அவன் காதலியை வேறொரு பணக்காரனை திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்துகிறார்கள். அவளும் திருமணம் செய்து கொள்கிறாள். அவள் கணவனுடன் சென்று விடுகிறாள் ஆனால் இவனின் இந்த சர்ச்சைக்குரிய ஓவிய முதுகைப் பற்றிக் கேள்விப்பட்டு அவள் கணவன் அங்கு வந்து சந்திக்கிறான்.

அவளின் காதல் உணர்வுகள் மீண்டும் அடிபடுகின்றன இந்த சூழலில் கோபத்தில் அங்கிருக்கிற ஓவியங்களை சேதம் விடுகிறான் காவல்துறையால் கைது செய்யப்படுகிறான். கணவனை விடுவிக்க காதலி அவனிடம் கேட்கிறாள். அவனை விடுவிக்க நீ படுக்க வர வேண்டுமா என்று கேட்டாலும் கணவனை விடுவிக்க முயற்சிகள் எடுத்து அவனை விடுதலை செய்ய வைக்கிறான். அவனின் உடம்பு பச்சை குத்துதல் போன்றவற்றால் கேன்சர் போன்ற வியாதிகள் வரக்கூடும் என்று பயமும் இருக்கிறது. அதை இன்சூரன்ஸ் செய்து பாதுகாக்கும் மருத்துவர்களும் ஓவிய குழுமமும் இருக்கிறார்கள் சரியாகவே கண்காணிக்கப்படுகிறது பல சமயங்களில் அவன் தன்னிலை மறந்து சுகபோக வாழ்வை குறைத்துக் கொண்டே இருக்கிறான். ஆனாலும் அவனின் உறுத்தல் இருந்து கொண்டே இருக்கிறது எதிர்பார்த்தபடி முதுகில் சீழ் பிடிக்கிறது.

அதை அறுவை சிகிச்சை மூலமாக சரிசெய்து கொள்கிறான். அவன் உடம்பு ஏலத்திற்குப் போகிறது பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலத்தில் கேட்கிறார்கள். அப்போது அவன் எரிச்சலாகி தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறான் இது அவனின் உடம்பு சார்ந்து ஒப்பந்தங்கள் போட்டவர்களுக்கு எரிச்சலாகி விடுகிறது. காவல்துறையும் இதில் இடையீடு செய்து அவனை காவலில் வைக்கிறார்கள் நீதிமன்றத்திற்கும் வழக்கு செல்கிறது அப்போதுதான் அவனின் விசா முடிந்து மூன்று மாதங்கள் ஆகியிருப்பது தெரிந்து அவனை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு சொல்கிறார்கள் நீதிபதிகள்.

அவன் மகிழ்ச்சியுடன் சிரியா நாட்டிற்கு செல்கிறான் பழைய காதலியோடு சேர்ந்து கொண்டு சேர்ந்து கொள்கிறான் ஆனால் அவன் முன்பு மியூசியத்தில் இருக்கும்போது அவன் ஒரு சிரியா அகதி என்ற வகையில் அவன் துன்புறுத்தப்படுகிறான். பல மனித உரிமை வழக்குகள் வருகின்றன. இந்த நிலைமையில் சிரியாவிற்கு செல்லுகிற போது அந்நாட்டின் தீவிரவாத குழுவொன்றால் அவனுடைய உடம்பை நுகர்வு ஆக்கியது குறித்த சர்ச்சையில் அவனை சுட்டுக் கொள்வதாக ஒரு வீடியோவை காணொளியை தயார் செய்து லெபனானில் இருக்கும் ஓவியர்களுக்கும் அவனை ஒப்பந்தம் செய்தவர்களுக்கும் தன்னைப் பற்றி விளக்கமாக அனுப்புகிறான் ஆனால் அது கட்டமைக்கப்பட்டு, பொய்யான காணொளி.

அவன் தன் காதலியுடன் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்வதை படத்தின் இறுதி கட்ட காட்சிகள் சொல்கின்றன உடம்பு விளம்பரப் பொருள் ஆகிற இந்த விஷயத்தை சில மலையாள மொழி க் கதைகளில்

படித்து இருக்கிறேன் இந்த கதை கூட பெல்ஜியம் சார்ந்த வில் டெல்லி அவர்களின் பிம் என்ற ஒரு படைப்பின் மூலமாக இருந்திருக்கிறது. உடம்பு நுகர்வு பொருள் ஆகிற விளம்பரப்புகள் ஆகிற சர்ச்சையை மனித உரிமை பிரச்சினையாக இந்த படம் முன் வைத்திருக்கிறது.

## ஏழைக்குழந்தைகள் படும் பாடும் அதிக பட்ச வன்முறை உலகமும்

லெஸ்மிசரபில் 1862ல் வெளிவந்த நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதி விளிம்பு நிலை மக்களைப் பற்றி பேசும் நாவலாகும்.. அப்போதைய பாரிஸ் நகரத்து புறநகரில் வாழும் விளிம்பு நிலை மக்கள் பற்றியதும், அந்நாட்டின் சாதாரண மக்களின் வாழ்க்கை, நீதித்துறை, குற்ற பின்னணிகள் போன்றவற்றை பற்றியும் அந்த நாவல் பேசியது.

வால் ஜின் என்ற சாதாரண மனிதன் பல தொழில்கள் செய்து அந்த நகரத்தின் மேயராகவும் ஆகிறான். பல திருட்டு குற்றங்கள் அந்த நகரத்தில் நடக்கிறது அதிலிருந்து அவன் விலகி நின்றாலும் அவனின் பழைய வாழ்க்கையை காட்டும் பலர் இருக்கவே செய்கிறார்கள். இந்த நாவலில் வரும் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் பல திரைப்படங்களில் வந்திருக்கிறார். தேவாலயத்திற்கு திருடுவதற்காக வந்துவிட்டு அப்படி திருட்டு பொருட்களை தப்பிக்கும் போது அவனை காவல்துறையில் பிடிபடுகிறது கிறிஸ்துவ பாதிரியார் அந்த பொருட்கள் எல்லாம் அவனுக்கு தான் கொடுத்தது என்று சொல்லி அவரை குற்றத்தில் இருந்து வெளியேறுகிறார்.

இந்த கதாபாத்திரத்தை பல தமிழ் மற்றும் இந்திய படங்களில் கூட நாம் காணலாம்.திருட்டுக்குற்றத்திற்காக சிறைக்குச் செல்பவன் செய்யும் தவறு பசிக்காகத் திருடுவதுதான்.சிறையில் இருந்து வெளியே வருபவன் ஒரு நல்ல படுக்கையில் தூங்குவது தனது ஆசை என்கிறான்.பாதிரியார் சாதாரண ஆசைதானே . நான் இடம் கொடுக்கிறேன் என்கிறார். அவன் ஆசையோடு தூங்கும் இடத்தில்தான் அந்தத் திருட்டு நடக்கிறது. லெஸ் மிசரபில் படம் கூட இந்திய மொழிகளில் மட்டுமில்லாமல் பல உலக மொழிகளிலும் வெளிவந்திருக்கிறது.

தமிழில் ஏழை படும் பாடு என்ற தலைப்பில் நாவலாக கூட வந்திருக்கிறது அந்த நாவலை ஒட்டி பல திரைப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன அப்படி ஒரு திரைப்பட முயற்சியில் அந்த திருடன் புதிய வாழ்க்கையை வாழ்கிறான், சின்ன நகரத்தில் பெரிய

வியாபாரியாக, ஒரு மேயர் என்ற அளவில் கூட அவனுடைய பதவி உயர்கிறது. ஆனால் காவல்துறை அவனை வேறு பார்வையில் தான் பார்த்துக் கொண்டே இருக்கிறது இந்த வகைப் படங்கள் நிறைய அந்த நாவலை ஒட்டி வெளிவந்திருக்கின்றன.

இப்போது வெகு சமயத்தில் இந்த நாவல் தலைப்பு வைத்துக்கொண்டு ஒரு முக்கியமான படம் வெளியாகிறது 2018 இல் உலக கோப்பையில் பிரான்ஸ் வெற்றி பெற்ற பின்னால் நடக்கும் சில நிகழ்வுகள் இந்த படத்தில் மையமாய் இருக்கின்றன. ஸ்டீபன் என்ற காவல் துறை அதிகாரி பாரிசுக்கு வந்து சேர்கிறார். குற்றப்பிரிவு அதிகாரியாக அவர் சிலருடன் இணைகிறான். அந்த குழுவில் கூடிய கிரிஷ் என்ற காவல்துறை அதிகாரி சிறு வயது குழந்தைகளை சீண்டுகிறவன், தண்டிப்பவன்.

அது சார்ந்த நடவடிக்கையில் ஈடுபடும்போது அவன் பல வகைகளில் விமர்சிக்கப்படுகிறான் அந்த குழுவில் இருக்கும் இன்னொருவனுக்கு குழந்தைகள் மீதான வெறுப்பு முயற்சி எல்லாம் தேவையில்லாததாக இருக்கிறது.. அவர்களுடைய பார்வையில் இசா என்ற சிறுவன் விழுகிறான். அவன் முன்பே சிறு குற்றங்களுக்காகத் தற்காலிக மறுவாழ்வு இல்லங்களுக்குச் சென்று திரும்பியவன். ஒரு சர்க்கஸில் சிங்கக்குட்டி காணாமல் போகிறது அதுதான் அப்போது அந்த காவல்துறை குழுவின் பார்வையில் படுகிறது. அந்த சிங்க குட்டியோடு இசா இருக்கும் ஒரு புகைப்படம் இன்ஸ்டாகிராமில் கிடைக்கிறது .அதை ஒட்டி இசாவைத் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள் ஆனால் அவன் அந்த சிங்கக்குட்டி ஓடிப் போய்விட்டதாக சொல்கிறான். அந்த சிங்கக் குட்டியை தேடும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். இசாவின் கூட இருப்பவர்கள் இந்த காவல்துறையின் இந்த பணியின் போது கொஞ்சம் முட்டுக்கட்டை போடத்தாக்குதல் நடத்தப்படுகிறது . இசா அடிபடுகிறான்.

ஆனால் இசாவை மருத்துவமனையில் சேர்க்க கூட அவர்கள் ஆர்வம் காட்டாத போது ஸ்டீபன் அவனை ஒரு மருத்துவமனையில் சேர்த்து அவனின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறான் அதேசமயம் அங்கு நடந்த விஷயங்களை டிரோன் மூலமாக ஒரு சிறுவன் படம் பிடித்திருப்பது தெரிகிறது அவனைத் தேடிப் போய் அந்த டிரோன் சிம் கார்டை பெறுவதில் அந்தக்காவல் துறைக்குழு அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். இசாவின் காயமடைந்த நிலையோ உயிருக்கு போராடும் நிலையோ அவர்களுக்கு அவர்களுக்கு இரண்டாம் பட்சம் ஆகி விடுகிறது.டிரோனில் படம்பிடிக்கப்பட்ட இசாவை துரத்தும்

காட்சிகள் அவனுக்கு ஏற்பட்ட நிலை இதையெல்லாம் தாண்டி படம்பிடித்த சிறுவனிடமிருந்து மாஸ்டர் கார்டு பெறுவது தான் அவர்களின் முக்கிய வேலையாக இருக்கிறது.

இந்த சூழலில் அந்த சிங்கக்குட்டி கண்டுபிடிக்கப்பட அதை சர்க்கஸில் கொண்டுபோய் விடுகிறார்கள். அந்த முதலாளி இசாவை தாய்ச் சிங்கத்திற்கு பலி கொடுப்படுப்பது போல பாவனை செய்ய அது பெரும் சிக்கலாகிறது அவனிடமிருந்து இசாவை காப்பாற்றி காவல்துறை சர்க்கசிலிருந்து வெளியே வருகிறது. சிங்கக் குட்டியை ஒப்படைத்து விட்டது அக்குழு. இப்போது அந்த டிரோனின் சிம் கார்டு தேவையாக இருக்கிறது . அந்தப் பையன் அடைக்கலமான இடம் ஒரு அரசியல் ரீதியான அதிகாரம் பெற்ற ஒருவரின் கடையாக இருக்கிறது. அவரிடமும் மதவாதிகளிடமும் காவல்துறையினர் தங்களுக்கு தேவையானதை சொல்கிறார்கள் அப்படித்தான் அந்த சிம்கார்டு ஒரு காவல்துறை அதிகாரியின் கையில் அகப்படுகிறது.

அவர் அதை மக்களுக்கு எதிராக பயன்படுத்துவார் என்று ஒரு குழப்பமும் இருக்கிறது. இந்த நிலையில் அந்த காவல்துறை அதிகாரிகள் அடுத்த நாள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது காயம்பட்ட இசாவும் அவன் கூட்டாளிகளும் சேர்ந்து காவல்துறை குழுவைத் தாக்குகிறார்கள். அந்தத் தாக்குதலிருந்து காவல்துறை தடுப்பதும் சிறுவர்களுடைய உச்சபட்ச வன்முறையும் படத்தின் இறுதி காட்சிகளாக அமைகின்றன. குழந்தைத் தன்மை மீறி அந்த சிறுவர்கள் செயல்படும் வன்முறை காட்சிகள் அபாயகரமானவை .அதை எதிர்கொள்கிற காவல்துறை அவர்களை எந்த வகையிலும் காயப்படுத்தி கூடாது என்று ஜாக்கிரதையாகத் தான் இருக்கிறார்கள்.

ஆனால் எல்லாம் கை மீறிப் போகிறது இந்த விசனத்தை இந்த படம் கைக் கொண்டிருக்கிறது.குழந்தைகளின் மன நிலைமை மீறி எழும் சூழல்கள் அபாயகரமானவை . விக்டர் ஹியூகோவின் நாவல் தலைப்பு, அந்த நாவல் காட்டிய பிரதேசம் ஆகியவை எடுத்தாளப்பட்டு இன்றைய நவீன வாழ்க்கை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரம் மூலம் முன்வைக்கப்படுகிறது சிறுவர் மத்தியில் ஒளிந்திருக்கும் வன்முறை உணர்வுகள், அதை அவர்கள் வெளிப்படுத்தும் முறை., குற்ற சமூகமாக சிறுவர்கள் இருப்பதும் சொல்லப்படுகிறது காவல்துறையின் அதிகாரமும் வன்முறையும் கொண்ட முகத்திலிருந்து மாறுபட்டு இன்னொரு முகமாய் சிறுவர்கள் வன்முறையோடு தங்களை வெளிக்காட்டுகிறார்கள்.

இன்றைய சிறுவர்கள் சார்ந்த உலகத்தை இந்த படத்தின்

மூலம் எதிர்கொள்வது சிரமமாகத்தான் இருக்கிறது. சிறுவர் சார்ந்த அதி தீவிர வன்முறை உணர்வுகளை இந்தப்படம் பிரதிபலிக்கிறது. நாவலின் காலகட்டமும் இன்றைய காலகட்டத்தின் போக்குகளையும் எடுத்துக்கொண்டு பார்க்கிறபோது அன்றைக்கிருந்த சாதாரண குற்றப்பின்னணி சம்பவங்கள் கருணை அன்பு இவையெல்லாம் மாறிப்போய் உச்சபட்ச வன்முறைக்குள் இந்த உலகம் இருப்பதை இந்த படம் காட்டுகிறது.

பல்வேறு திரை வடிவங்களை கொண்டிருக்கிற அந்த நாவல் பழைய படங்களிலிருந்து வேறுபட்டு உச்சபட்சமான வன்முறைகளும் அது சார்ந்த சிறுவர் உலகத்தையும் முன்வைக்கும் ஒரு முக்கிய படமாக இவ்வாண்டில் ஒரு பிரதியாக படம் வெளிவந்திருக்கிறது. இன்னும் பல வடிவங்களை அந்த நாவல் எடுக்கக்கூடும். அப்போது அந்த நாவல் எழுப்பும் குற்றப்பின்னணி., அன்பு இரக்கம் சார்ந்த விஷயங்களும் மற்றவருடன் பகிர்ந்து கொள்ளப்படும் அதற்கான நல்ல சாட்சியாக இந்த படம் இருக்கிறது

## அமனித உயிர்கள் நடமாட்டம் அபாயமானதா..<br>லேம்: ஐஸ்லேண்ட் படம்

'மனித வளர்ச்சியானது கருத்தரிப்பின் போதே தொடங்குகிறது'. விந்தணுவானது சினை முட்டையினுடைய சவ்வினுள் வெற்றிகரமாக உள்ளே செல்வது கருவுறுதல். விந்தணு மற்றும் முட்டை இரண்டினுடைய மரபணு பொருட்கள் சேர்ந்து ஒரே செல்லாக மாறுகிறது.

மூலவுருவுக்கப்புறமான திசுக்களாக வளர்ச்சியடைகிறது. இறுதியில், உருப்பெற்றக் கருவினுடைய சவ்வும் மற்றும் நஞ்சுக்கொடியும் உருவாகிறது. அந்த நஞ்சுக்கொடியும் உருவமும் மனித உருவத்தோடு ஒத்து வருகையில் சகஜமாக நடமாடுகிறது. இல்லாத போது அந்நியப்பட்டுப் போகிறது.

அப்படித்தான் அடா என்கிற உயிரும் அந்நியமாகிறது. ஐஸ்லேண்ட் என்கிறபோது பனி பிரதேசங்களும் மலைகளும் ஆறுகளும் தான் ஞாபகம் வரும் அப்படியான பிரதேசத்தில் நடக்கும் ஒரு கதை இதில் வருகிற ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடா என்ற பெயர் இருக்கிறது. லிவிலியத்திலுள்ள ஒரு முக்கியமான பெயர், அடா என்ற கதாபாத்திரம் விவிலியத்தில் வருகிறது அதேபோல ஆட்டுக்குட்டியும் மனித தலையும் இணைந்த உயிர் கிரேக்க தொன்மக் கதைகளில் இடம் பெறுகிற விஷயமாகும்.

இவை இரண்டையும் இந்த படத்தில் பார்க்கிறோம் மனித உடம்பும் ஆட்டுத் தலையும் கொண்ட ஒரு உயிர் பலருக்கு இங்கே ஆறுதலாக இருக்கிறது. சிலருக்கு இங்கே சிரமமாக இருக்கிறது. பனியும் மலைகளும் நிரம்பிய பகுதியில் ஆடு மேய்ப்பது அவற்றை விற்பதும் என்று மரியாவும் அவரின் கணவரும் வேலையாக ஈடுபட்டு வருகிறார்கள். ஆடுகளுக்கு பிரசவம் பார்ப்பது என்பது அவர்களுக்கு அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது. ஒரு பிரசவத்தில் அப்படித்தான் அவர்கள் அவ்வளவு கருணையுடனும் அன்புடனும் அந்த ஆட்டை கவனத்தில் கொண்டாலும் பிறக்கின்ற ஒரு ஆட்டுக்குட்டியின் தலையுடனான உருவம் ட மனித உடம்பும் ஆக இருக்கிறது. அதை மரியா தன் குழந்தை போலவே வளர்க்கிறார்.

ஆனால் எப்படி இப்படி ஆனது என்று ஒரு வருத்தம் அவருக்குள் இருந்து கொண்டே இருக்கிறது. இறந்த போன குழந்தை ஆவின் ரூபத்தில் வந்திருப்பதாக அவர் நினைக்கிறார். அதுவே அவருக்கு ஆறுதலாக இருக்கிறது .ஆனால் அவனைப் பெற்றெடுத்த அந்த தாய் ஆட்டுக்குட்டி மரியா வுடன் அது வளர்வதையும் தன்னிலிருந்து தனிமைப்பட்டு இருப்பதையும் பார்த்து திரும்பத் திரும்ப கத்துகிறது. வீட்டை சுற்றி சுற்றி வருகிறது. இது மரியாவுக்கு சில சமயங்களில் எரிச்சலாக இருக்கிறது.

எனவே அந்த தாய் ஆட்டை அவள் சுட்டுக் கொன்று விடுகிறாள். அடா பெரும் ஆறுதலாக அளித்து கொண்டு இருக்கிறாள். தாய் ஆட்டை சுடுவதை பார்க்கிற மரியாவின் கணவனின் தம்பி அவளைப் பல விதங்களில் தொல்லைப்படுத்திக் கொண்டே இருக்கிறான் பாலியல் ரீதியாக கூட அவளை பயன்படுத்த நினைக்கிறான். ஆனால் அவள் அதில் இருந்தால் தப்பித்துக் கொண்டே இருக்கிறா.ள் கடைசியில் அவனை எப்படியோ ஊருக்கு அனுப்பி வைத்து விடுகிறாள் திடீரென்று அவர்களின் வளர்ப்பு நாய் கொல்லப்படுகிறது. இது மரியா மற்றும் அவள் கணவனின் மத்தியில் பயத்தை கிளப்புகிறது.

ஒரு நாள் அவன் கணவனும் காணாமல் போகிறான். அந்த மலைப்பரதேசத்தில் பனி அடர்ந்த பகுதிகளில் தன் கணவனைத் தேடி அலைகிறாள் மரியா கடைசியில் கணவன் கொல்லப்பட்டு இருப்பது தெரிகிறது. அவனை கொன்றது யார் என்று அவளுக்கு விளங்கவில்லை பாதி மிருகம் பாதி மனிதனாகவும் இருக்கிற அடாவின் தந்தை என்று அதே வகையில் இருக்கும் ஒருவன் தான் அந்த கொலையைச் செய்கிறான் அவனுக்கு மனித உருவம் இருக்கிறது

தலையில் யானையின் தலை இருக்கிறது. அவன் கொலையுண்டது பற்றி மரியாவிற்கு தெரியவில்லை ஆனால் இப்போது தன்னுடைய வளர்ப்பு நாயும் தன் கணவரும் இழந்து போக அவள் அங்கேயே தனிமைப் படுத்தப்படுகிறார் மரியா.

உயர்ந்த மலைப்பகுதிகளும் புல்வெளிகளும் பனியடர்ந்த இடங்களும் அவளுக்கு துணையாக இருக்கின்றன. அந்த பிரதேசத்தை முழுமையாக படத்தில் கொண்டு வருவதில் இயக்குனரின் திறமை வெளிப்பட்டு இருக்கிறது .அதேபோல தங்களை யார் என்று அடையாளம் காட்டிக் கொள்வதில் பலரும் வந்து போகிறார்கள். கணவரின் சகோதரர் அதில் முன்னணியில் இருக்கிறார் அவர் ரூபம் என்னவாக இருந்தாலும் மரியாவை கவர்ந்து கொள்வது முக்கியமாக இருக்கிறது. அதைக் கடந்து மரியா தனித்து நிற்கிறாள்.

அவளுக்கும் அவள் குடும்பத்திற்கும் பயனுள்ளதாக இருந்த வீட்டு நாயும் இறந்து போய் விடுகிறது அடாவை இப்போது அபகரித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். தந்தை என்று சொல்லப்படுகிற அந்த உருவம் .இந்தவகையில் மரியா தான் கொலை செய்த அந்த ஆட்டை குற்ற உணர்வுடன் நினைத்துக் கொள்கிறாள். அவள் எவ்வளவோ பிரசவங்களை பார்த்திருக்கிறாள் ஆனால் இந்த மிருகமும் மனிதனும் ஆன அடாவை பெற்றெடுத்த போது அவள் அடைந்த சிரமங்களும் மன சித்திரவதைகளும் அதிகம்தான்.

பெண்ணை அபகரித்துக் கொள்ளுதல், பாதி மிருகம் பாதி மனித உருவங்கள் அவற்றின் ஆக்கிரமிப்பு என இவற்றையெல்லாம் கிரேக்க நாடகங்களும் தொன்மங்களும் விவிலியமும் கலந்து இந்த கதை உருவாக்கப்பட்டிருக்கிறது.இவ்வகையில் பல தன்மைகளில் கூட்டு சேர்க்கையாக இருக்கிற போதும் மனிதன் தனிமைப்பட்டு தான் நிற்கிறான் அப்படித்தான் மரியாவும் தனிமைப்பட்டுப் போகி றாள். ஆனால் இயறகை அவளுக்கு ஆறுதலாக இருக்கிறது . ஐஸ்லேண்டின் இசைக்குறிப்புகளை இப்படத்தில் காணக்கிடைப்பது அபூர்வமான விசயம் என்று நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்போஅது அந்நாட்டில்பிரபலமாகியுள்ள் ப்ளுஸ்ராக் இசைக்குழு பற்றி பல தகவல்கள் கிடைத்தன.காலியோ என்ற இசைச் சேனலில் ஐஸ்லேண்டின் இசைக்குறிப்புகளைக் காணலாம்.காலியோ என்றால் அவர்களின் மொழியில் குரல் என்று அர்த்தமாம். கிராமி விருதின் இறுதிப்பட்டியலில் இடம் பிடித்து இது சாதனை படைத்துள்ளது. ஐஸ்லாந்தின் நவீன இசையின் அடையாளமாக்த் திகழ்கிறது

காலியோ. இந்த இசை வீடியோக்கள் 110 கோடிக்கும் அதிகமானப் பார்வையாளர்களை சந்தாதார்ர்களாகக் கொண்டுள்ளது.

## காணாமல் போகிறவர்கள்

காணாமல் போன கோப்புகள் என்ற என்னுடைய சிறுகதை மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். அது பல ஆண்டுகளுக்கு முன்னால் ஞாநி அவர்கள் நடத்திய தீம் தரிகிட இதழில் வெளியானது அந்த கதை காஷ்மீர் பின்னணியில் காணாமல் போகிற சில ஆண்களைப் பற்றியது.. இந்த வகையில் தேசிய சிக்கல்களை முன் வைத்து போராடுகிற மனிதர்கள், வெவ்வேறு வகையான மனிதன் உரிமை பிரச்சனைகளை சார்ந்து போராடுகிறவர்கள் போன்றவர்கள் காணாமல் போவது சகஜமாகிவிட்டது அதுவும் போர்க்காலங்களில் ஆண்கள் தவறிப் போவதும், இல்லாமல் போவதும் சாதாரணமாக போர்க்கால நடவடிக்கையின் போது நிகழ்கின்றன காணாமல் போன மனிதர்களை முன்வைத்து பல படைப்புகள் வெளிவந்திருக்கின்றன,

அதில் ஒன்றுதான் அல்பேனிய படம் ஹீவ். 98- 99 ஆண்டுகளில் கொசாவில் நிகழ்ந்த போரின் காரணமாக பல ஆண்கள் காணாமல் போகிறார்கள். அதில் ஒரு பெண் பஹ்ரிஜே தன் கணவன் காணாமல் போனது குறித்து ராணுவத்திலும் காவல்துறையிலும் புகார் அளிக்கிறார். ஆனால் இது போன்ற புகார்கள் தொடந்து கொண்டிருக்கின்றன என்பது தான் எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இதுபோன்று காணாமல் போனவர்கள் பற்றிய சித்திரங்கள் நிறைய உண்டு.

இந்த நிலையில் அந்தப் பெண் தன் குடும்பத்தை காப்பாற்ற வேண்டி வேலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மகன் மகள் மற்றும் மாமனார் அந்த குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள். காணாமல் போன கணவர் தேனீ வளர்க்கும் தொழிலை செய்து வந்தவர். அதன் மூலமாக கிடைக்கும் வருமானம் குடும்பத்திற்கு ஓரளவு போதுமானதாக இருக்கிறது. அதை நம் கதாநாயகியும் செய்ய வேண்டியிருக்கிறது தேன் விற்றும், வறுத்த சிவப்பு மிளகாய் ஊறுகாய் செய்து விற்றும் அவள் வாழ்க்கையை ஓட்ட வேண்டியதாக இருக்கிறது அவளின் குடும்பமே தேசபக்தியும் நாட்டைக் காக்கும் உணர்வையும் கொண்டது.

இந்த சூழலில் அவள் வாழுகிற பகுதியில் கணவன்மார்கள் காணாமல் போன பல வீட்டுப் பெண்கள் இருக்கிறார்கள் அல்லது விதவைகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு அவள் கூட்டுறவு முறையில் அந்த தொழிலைத் தொடர்கிறார். ஆனால்

வெளியில் அலைவதற்கும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் வாகனம் தேவைப்படுகிறது. வாகனம் ஓட்ட அனுமதி பெற வேண்டி இருக்கிறது அப்படி வாகனம் ஓட்ட அனுமதி லைசன்ஸ் பெற சிரமப்படுகிறாள். அதுவே பலருக்கு பிடிப்பதில்லை.

விதவையான பெண்ணின் கடமை என்றால் குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றுவது, குடும்பத்தில் இருந்து கொண்டு குடும்பத்தினுடைய பெருமையை கௌரவமான தொழிலைச் செய்வது., வீட்டில் உள்ள பெரியவர்களை கவனித்துக் கொள்வது என்பதும் அதேபோல விதவை என்பவள் வீட்டு வேலைக்கு உரியவள் வீட்டிலேயே இரு என்று பலரால் அறிவுரை சொல்லப்படுகிறது. ஆனால் அவளுக்கும் அவள் குடும்பத்திற்கும் அவளை நம்பி இருக்கிற கணவன் இழந்த பெண்களுக்கும் அல்லது கணவன் காணாமல் போன குடும்பத்தினருக்கும் தேவையாக கூட்டுறவு முறையில் அவள் அந்த தொழிலை செய்ய முற்படுகிறாள். தேவையில்லாத விமர்சனங்கள் மூலமாக அவள் காயப்படுத்தப்படுகிறாள் தன் குழந்தைகள் மூலமாகவே அவள் வேசி என்று கெட்ட பெயர் சுட்டப்படுகிறாள். அதே பெயரை அந்த பகுதியில் உள்ள ஆண்கள் அவள் மீது எந்த காரணமும் இல்லாமல் சூட்டுவது சாதாரண அடைய வைக்கிறது எரிச்சலில் அவளின் மகிழுந்தும் சேதப்படுத்தப்படுகிறது ஆனால் அவள் வேறு வழியில்லை தொடர்ந்து கொண்டிருக்கிறாள். அவள் தயார் செய்யும் பொருட்களை சேதப்படுத்தியும் சிதைத்தும் அவளை தனிமைப்படுத்துகிறார்கள்.

கூட இருக்கும் பெண்கள் தங்களுடைய நகைகள், விலை உயர்ந்த பொருட்களை கொடுத்து மீண்டும் அந்த தொழிலை ஆரம்பித்து வைக்கிறார்கள். காணாமல் போன கணவரைப் பற்றிய ஏதாவது செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன ஆனால் உறுதியாக அவன் இறந்தது சொல்லப்படுவதில்லை பிணங்கள் புதைக்கப்பட்ட இடங்களை தோண்டுவதும் அதிலிருந்து கிடைக்கும் பொருட்களை கொண்டு வந்து பாதிக்கப்பட்ட பெண்களிடம் காட்டுவதும் நடந்து கொண்டிருக்கிறது. அப்படித்தான் அவளின் கணவனின் உடையும் மற்ற பொருட்களும் சிதைந்த நிலையில் அவரிடம் காண்பிக்கப்படுகிறது.

அது அவருடைய கணவனின் உடை என்று சொல்ல விருப்பமில்லை அழுகை தான் அவளுக்கு பதிலாக வெளிப்படுகிறது காணாமல் போன கணவன்களை தேடும் மனைவிமார்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறார்கள்.. இலங்கைக்குச் சென்றிருந்த போது காணாமல் போன கணவன்மார்கள், பிள்ளைகளைக் கண்டு

பிடிக்கக் கோரி பெண்கள் கிளி நொச்சியில் செய்து வந்த நீண்ட கால ஆர்ப்பாட்டத்தை கவனித்தேன் விதைவுகளின் துயரம் பற்றியும் கைவிடப்பட்ட பெண்களின் துயரம் பற்றியும் அவர்கள் தங்களுக்கான வருவாய்க்காக உழைக்க வேண்டிய சிரமங்கள் பற்றியும் இந்த படங்கள் தெரிவிக்கிறது. போரில் காணாமல் போகிற அல்லது இறந்த போகிற கணவன்மார்களுடைய துயரங்கள் அபரிமிதமானவை அவர்களுக்கான ஆறுதலும் தேவையாக இருக்கிறது சமூக நடவடிக்கைகள் அந்த ஆறுதலுக்கு வழிகாட்டும்..

(ஆல்பா)

# ”சிலுவை“ நாவல் அனுபவங்கள்

## சுப்ரபாரதிமணியன்

என் ”சிலுவை“ நாவல், என் நாவல்களின் பட்டியலில் இருபத்தைந்தாவது என்றும் புத்தகங்களின் எண்ணிக்கையில் நூறாவது என்றும் எதேச்சையாக அமைந்திருக்கிறது. பத்து ஆண்டுகளின் கனவுகளாக இருந்து இப்போது இந்த நாவல் வெளியாகி இருக்கிறது. இன்று வெளியாகி இருக்கிற மற்ற நூல்கள் பல ஆய்வுகள், ஆராய்ச்சிகள் என்ற ரீதியில் அமைந்திருக்கின்றன. இந்த ஆய்வுகள் பொதுமக்களிடம் செயல் சென்று சேர வேண்டும் என்று ஸ்டாலின் குணசேகர் அவர்களும் ஓடைத்துரையரசன் அவர்களும். சொன்னார்கள் பொதுவாக இத்தகைய ஆய்வுகள் கல்வித்துறை சார்ந்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் என்று இருப்பதாகும். இது பொது மக்களிடம் சென்று சேர வேண்டும் என்ற ஆசைப்படுவது வினோதமாக தான் இருக்கிறது.

ஆனால் எல்லா படைப்புகளும் இதுபோல் பொதுமக்களிடம் சென்று தான் அடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாக கூட இருக்கிறது. கிறிஸ்துவ பாதிரியாக இருந்த எபிரேம் என்ற முதியவரை பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன் சேவூர் புளியம்பட்டி சாலையில் உள்ள ஒரு தேவாலயத்தில் சந்தித்தேன். பைபிளில் வரும் பல நிகழ்ச்சிகள் அந்த தேவாலயத்தின் உள்ளேயிருந்த சுவர்களில் சித்திரங்களாக வரையபட்டும் தூண்களாக அமைக்கப்பட்டு இருந்தன. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது அவர் அறிமுகமானார.

அவர் ஒரு ஆய்வாளர் என்று சொல்லிக் கொண்டார். அவர் சோமனூர் என்ற பகுதியைச் சார்ந்தவர் என்ற வகையில் அவருடைய ஆய்வைப் பற்றி சொன்னார்.. நான் அவரின் சொந்த ஊரான சோமனூர் பக்கத்தில் உள்ள செகடந்தாளி என்ற கிராமத்தை சார்ந்தவன் என்ற வகையில் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நானும் பேசினேன். அவர் ஆய்வாளர் என்ற வகையில் சோமனூர் பற்றி செய்திருக்கிற ஆய்வுகளையும் அவை கிறிஸ்துவ பத்திரிகைகளில் வந்திருப்பது பற்றியும் நிறைய சொன்னார். எனக்கு பெரிய நாவல்கள் எழுத வேண்டிய ஆசை இருந்தது ஆனால் அதற்கான களம் என் மனதில் இல்லை. என் நாவல்கள் எல்லாம் 300 பக்கங்களுக்குள் அடங்கிப்

போகும் அளவில் இருந்திருக்கின்றன. இந்த சூழலில் ஒரு பெரிய நாவலை சோமனூரைக் களனாகக் கொண்டு கடந்து போன 300 ஆண்டு சரித்திரத்தை எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்தது. நான் வாழ்ந்த மக்கள், நிலம் பற்றி நான் அதிகம் எழுதவில்லை என்னுடைய மூதாதையர்ளின் தொழில் சார்ந்தும் என்னுடைய பரம்பரை சார்ந்தும் அவர்களுடைய அவர்களுடைய வாழ்க்கை பற்றியும் நான் பெரிதாக எதுவும் எழுதவில்லை. எனவே சோமனூரை பற்றி எழுதுவது என்பது என் மூதாதையர் நிலம் சார்ந்தும், என் மூதாதியர் தொழில் மற்றும் வாழ்க்கை முறை சார்ந்தும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது என்று பட்டது .அந்த கிறிஸ்துவ பாதிரியார் ஏறத்தாழ ஒரு முதுமை இல்லத்தில் தான் இருந்தார். அவரிடம் இருந்து சில சேகரித்துக் கொண்ட தகவல்கள் நாவல்கள் எழுத உதவினார்.

பின்னால் அவர் வால்பாறைக்கு சென்று விட்டதாக சொன்னார்கள். வால்பாறை போன்ற இடங்களின் சீதோஷ்ணம் அவருடைய உடல்நிலை எப்படி ஒத்துவரும் என்பதுதான் என்னுடைய கவலையாக இருந்தது. ஆனால் எந்த தொடர்பும் இல்லாமல் தான் இருந்தேன் அவரை தேடி சென்ற ஒரு முறை அவர் இறந்து போய்விட்டார் என்று சொன்னார்கள். ஆனாலும் அவர் சொன்னபடி இந்த ஆய்வுகள் பொதுமக்களிடம் தான் சென்று சேர வேண்டும் என்பதால் நான் அதை ஒரு நாவலாக்கும் பணியில் உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அப்படித்தான் இந்த நாவலை நான் எழுதினேன் இந்த நாவல் நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போதுஅச்சிலும் புத்தகமாகவும் வருவது என்பது எனக்கு ஆறுதலாக இருக்கிறது நீண்ட நெடுங்காலமாக இதை எதிர்பார்த்து இருந்தேன்.

இடையில் வந்த கொரோனா காலம் இந்த தாமதத்தை அதிகப்படுத்தி விட்டது. அந்த வகையில் இந்த நாவல் என்னுடைய நூறாவது புத்தகமாகவும் அமைந்துவிட்டது. கலாச்சார சரித்திரம் என்பது அரசியல் சரித்திரம் மற்றும் கடந்து போகும்ஆண்டுகளின் நிகழ்வுகளின் தொகுப்புகள் என்றபடி இருக்கும். இந்த கலாச்சார சரித்திர நிகழ்வுகளை ஒரு நாவலுக்குள் கொண்டு வருவது , அந்த மனிதர்கள் வாழ்க்கையை இதற்குள் வைத்துப் பார்ப்பது எனக்கு தேவையானதாக இருந்தது சோமனூர் என்ற பகுதியில் திப்பு சுல்தான் போன்றவரின் வருகை கிறிஸ்தவர்களின் முக்கிய இடமாக இருந்த சத்தியமங்கலம், கொடிவேரி போன்று சோமனூர் விளங்கிய விதம், நெசவாளர் குடும்பங்களின் நிலை, பஞ்ச காலங்கள், மக்கள் கிறிஸ்துவத்திற்கு மாறிய வித்தைகள் என்று தொடர்ந்தது, என் நாவல் பின்னால் இரண்டாவது பாகமாக சோமனூர் மற்றும் கோவை பகுதிகளில் தொழிற்சங்க வரலாற்றுப் பதிவுகளாவும் மாறிவிட்டது. இன்னொரு பகுதியாக நான் அவர்களை திருப்பூருக்கு கொண்டு போனேன்.

காரணம் 10 வயது வரை தான் அந்த செகடந்தாளி கிராமத்தில் நான் வசித்து வந்தேன், தண்ணீர் பிரச்சினை, மேல் சாதி ஆதிக்கவாதிகளின் வன்முறை காரணமாக திருப்பூருக்கு குடி பெயர்ந்த நெசவாளர் குடும்பங்களில் என் குடும்பம் ஒன்றாகிவிட்டது. எனவே என் நாவலைக்கு அங்கு நகர்த்துவதும் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டு வந்த அந்த நெசவாளி குடும்பத்தை சார்ந்த ஒருவனின் பொதுவுடமை இயக்கம் சார்ந்த நடவடிக்கைகளும் தலைமறை வாழ்க்கையும் என்று தொடர்ந்தது .பின்னால் திருப்பூரில் பின்னலாடை

வளர்ச்சியும் நவீன யுகத்தில் மற்றும் உலகமயமாக்களில் தொழிலாளர்கள் நிலைமை என்று தொடர்ந்தது. என் வாழ்க்கைஅனுபவங்களையும் உள்வாங்கிக் கொண்டவற்றையும் சோமனூர், திருப்பூர். திருப்பத்தூர் என்று விரிவாக்கிக் கொண்டேன்.

நினைவுகளை, கலாச்சார பதிவுகளை பகிர்ந்து கொள்கிற அனுபவத்தில் இந்த நாவலை வடிவமைத்தேன், எனது பல படைப்புகளுக்குள் வந்த அமைந்திருந்த பின்னல் தொழிலும் விசைத்தறி தொழிலும் நெசவுத் தொழிலும் இயல்பாகவே இந்த நாவலுக்குள்ளும் வந்துவிட்டன சமீப காலம் வரை. நீண்ட கடல் பயணத்தில் அலைக்கடிக்கப்படுகிற படகு வாசிகள், படகு பயண வாதிகள் போல இருத்தலியல் சிக்கல்களும் வாழ்க்கை மீது மீதான நம்பிக்கையும் மாறி மாறி செயல்பட என் கதாபாத்திரங்கள் அமைந்து விட்டார்கள்.

அந்த வகையில் நினைவுகளையும் சரித்திரம் சொல்லும் மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் நினைவுகளாகப் பகிர்ந்து கொள்கிற வாய்ப்பும் இந்த நாவல் மூலம் ஏற்பட்டதும் இந்த நாவல் அனுபவங்கள் போல் பல அனுபவங்களும் வாழ்க்கையை கடந்து போக செய்திருந்தாலும் ஒரு பெரிய நாவலையே பதிப்பித்தலில் இருக்கும் சிரமங்களால் இன்னும் ஒரு பெரிய நாவலை எழுதுகிற ஆசையும் இப்போதைக்கு இல்லாமல் ஆக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் வாழ்க்கை பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம். அதை அடுத்த தலைமுறைக்கு கடத்திக் கொண்டே இருக்கலாம். அது கலாச்சார இயல்புகளும் மொழியும் மாறிக்கொண்டிருக்கும் தன்மையில் அதை செய்து கொண்டே இருக்கலாம் என்றுதான் எனக்கு இந்த நாவல் வெளியிட்டில் தோன்றுகிறது.. 300 ஆண்டுகளுக்கு மேலான கொங்கு பகுதியின் சரித்திர, கலாச்சார வாழ்வை காட்டும் நாவல் இது. திப்பு சுல்தான் வருகை , கிறிஸ்தவர்களின் குடியேற்றம் தொடங்கி ஒரு கிறிஸ்துவ குடும்பத்தின் நீண்ட வாழ்க்கை இதில் இடம் பெற்றிருக்கிறது. சோமனூர் வாழ் நெசவாளர் வாழ்வியல், மில் தொழிற்சங்க இயக்க செயல்பாடுகள் என்று தொடங்கி நவீனப் பின்னலாடை தொழில்சார்ந்த வாழ்க்கை முறை என்று சமீப காலம் வரை நீள்கிறது. அந்தக் கிறிஸ்தவ குடும்பத்தின் முழு உலகமும் தனித்து ஒரு தீவாய் தள்ளப்பட்டாலும் சமூக மனிதர்களின் தொடர்புடன் அடிவானத்தை நோக்கிப் பயணப்படுகிற கப்பலை போல் ஆழ்கடல் நடுவில் கரை எதுவும் காணாதபடி இருத்தலியல் சிக்கல்களுடன் சென்று கொங்கு பகுதி மக்களின் வாழ்க்கையின் உண்மை தன்மையையும் மதிப்பீடுகளையும் சொல்கிறது இந்த நாவல்..நாவலை வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்திற்கு நன்றி,

**(ரூபாய் 1200 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை வெளியீடு)**
**ஈரோடு புத்தக கண்காட்சியில் நடைபெற்ற புத்தக**
**நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தின் 25 நூல்கள் வெளியிட்டு**
**விழாவில் சிலுவை வெளியிட்ட போது பேசியது**

– – – – –

# நாஞ்சில்நாடன் கவிதைகள்

**துட்டி வீடு**

சட்டம் தன் கடமையைச் செய்யும்
அறம் தோற்றதும் மறம் என்றதும் இல்லை
கடவுள் யாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கிறான்
எல்லாம் இழவு வீட்டின் துக்க மொழி
உண்மையில் எவரும் எதுவும்
எந்தப் புல்லையும் புடுங்குவதில்லை

**களியாட்டு**

சினிமாவின் இறுதியில்
வில்லன் உதைபட்டுச் சாவான்
நல்லவன் தனித்துப் போராடி வெல்வான்
நடப்பில் எல்லாமே எதிர்மறை
சினிமாவே யதார்த்த வாழ்வின் பகை முரணோ?
அல்லால் காசு அள்ளும் களியாட்டு ஆமோ

**காப்பு**

எவரும் அறியாமல் கரவாய்
வன்கொடுமையால் வளம் பெருக்கலாம்
வன் கலவியோ களவோ கொலையோ செய்யலாம்
பிறர் அறிந்தால் அல்லவா
குற்றம் இழிவு தண்டனை
அறியாது காத்தலே இன்று அறமாயிற்று

## கனவு வங்கி விபரம்:

Subrabharathimanian
A/c No. 1408522610.
Central Bank of India Bank, ATL branch
Perumanallur Road, Tiruppur
IFCS No: CBIN0284145
MICR No: 6410 16104
G pay : 948610 1003

SUBRABHARATHIMANIAN
8/2635 Pandian Nagar, Tiruppur 641602,
subrabharathi@gmail.com.. 09486101003
Fb: Kanavu Subrabharathimanian Tiruppur and
Subrabharathimanian Palanisamy
Blog: www.rpsubrabharathimanian.blogspot.com
Pl visit Keetru.com for Kanavu.

இதழ்: 112/113 நவம்பர் 2023 ரூ15

## சுப்ரபாரதிமணியனின் சில சமீபத்திய நூல்கள் "கனவு" விற்பனையில்

* மணல் வீடு – நாடகங்கள் – ரூ. 120 (நிவேதிதா)
* தற்கால தமிழ் இலக்கியக் கட்டுரைகள் – ரூ. 180 (கனவு)
* பறந்து கொண்டிருக்கும் கழுகு (கட்டுரைகள் ரூ.640 (காவ்யா)
* வியட்நாம் வீரபூமி ரூ. 750 (நிவேதிதா)
* புலம் பெயர் மணற்துகள்கள் ரூ.30 (மொழிபெயர்ப்புக் கவிதைகள்)
* மூன்று நதிகள் (சிறுகதைகள் ரூ. 100 எழுத்து)
* பிளிறல் (சிறுகதைகள் ரூ. 120 கனவு)
* பாலின பேத வன்முறையும் பங்களாதேஷ் அனுபவமும் (ரூ 80 என்சிபிஎச்)
* பச்சைப் பதகம் (கட்டுரைகள் – ரூ.100 வாசக சாலை)
* அந்நியர்கள் – நாவல் (ரூ.300 கவிதை) (ஒரு லட்சம் ரூபாய் எழுத்து பரிசு பெற்றது)
* புதுச்சேக்காரர்கள் – ரூ. 80 (காவ்யா)
* திரைவெளி – சினிமா (ரூ.250 – நிவேதிதா)
* 1098 – நாவல் (ரூ. 100ஜீரோ டிகிரி)
* 14/40 கொண்டை ஊசி வளைவு (ரூ. 135 உயிர்மை)

Book Post * Printed Book
(Kanavu, 8/2635 Pandian Nagar, Tiruppur 641 602 - 9486101003

To

..................................................................

..................................................................

..................................................................

..................................................................

# கனவு

இதழ் 112-113 37ஆம் ஆண்டில்..



## திரைப்பட சிறப்பிதழ்

நாஞ்சில் நாடன் - அழகுபாண்டி அரசப்பன்

- அமுத ஜீவன் - ஆல்பா - சுப்ரபாரதி மணியன்

# சுப்ரபாரதி மணியனின் சிலுவை நாவல்

# NCBH Rs 1200

300 ஆண்டுகளுக்கு மேலான கொங்கு பகுதியின் சரித்திர, கலாச்சார வாழ்வை காட்டும் நாவல் இது. திப்பு சுல்தான் வருகை , கிறிஸ்தவர்களின் குடியேற்றம் தொடங்கி ஒரு கிறிஸ்துவ குடும்பத்தின் நீண்ட வாழ்க்கை இதில் இடம் பெற்றிருக்கிறது.

சோமனூர் வாழ் நெசவாளர் வாழ்வியல், மில் தொழிற்சங்க இயக்க செயல்பாடுகள் என்று தொடங்கி நவீனப் பின்னலாடை தொழில்சார்ந்த வாழ்க்கை முறை என்று சமீப காலம் வரை நீள்கிறது.

அந்தக் கிறிஸ்தவ குடும்பத்தின் முழு உலகமும் தனித்து ஒரு தீவாய் தள்ளப்பட்டாலும் சமூக மனிதர்களின் தொடர்புடன் அடிவானத்தை நோக்கிப் பயணப்படுகிற கப்பலை போல் ஆழ்கடல் நடுவில் கரை எதுவும் காணாதபடி இருத்தலியல் சிக்கல்களுடன் சென்று கொங்கு பகுதி மக்களின் வாழ்க்கையின் உண்மை தன்மையையும் மதிப்பீடுகளையும் சொல்கிறது இந்த நாவல்..

" சிலுவை" நாவல் சுப்ரபாரதி மணியனின் இருபத்தைந்தாவது நாவலாகவும், நூறாவது புத்தகமாகவும் இது அமைகிறது

---

## கனவில் கிடைக்கும்

## சுப்ரபாரதிமணியனின் ஆங்கில நாவல்கள்

* Palam lines – Rs175 (ரேகை நாவலின் மொழிபெயர்ப்பு)
* Oh Hyderabad – Rs 150 (ஓ.. செகந்திராபாத் நூலின் மொழிபெயர்ப்பு: இரண்டும் மொழிபெயர்ப்பாளர் பேரா.ராம்கோபால்) புஸ்தகா, பெங்களூரு வெளியீடு
* 1098 (தமிழில் ஜீரோ டிகிரி பதிப்பகம்)
* The Notch (மாலு – தமிழில் உயிர்மைப் பதிப்பகம்)

இந்த இரு நாவல்களை டெல்லி ஆதர்ஸ் பிரஸ் வெளியிட்டுள்ளது.

* Coloured urtain Rs. 300 (சாயத்திரை)
* Sumangali Rs. 200 (முறிவு)
* Migration 2.0 Rs. 150
* The faces of Dead Rs. 150 (பிணங்களின் முகங்கள்)
* The unwritten letters Rs. 100 (தேனீர் இடைவெளி)

# கனவில் கிடைக்கும் சுப்ரபாரதிமணியனின் நாவல்கள்

==========================================================

* மற்றும் சிலர் 1987
* சுடுமணல் 1990 (மலையாளத்திலும் வெளியாகி உள்ளது)
* சாயத்திரை 1998 (சிறந்த நாவலுக்கான தமிழ அரசு பரிசு பெற்றது, ஆங்கிலம், கன்னடம், மலையாளம், கன்னடம், இந்தி, வங்காள மொழிகளில் வெளியாகியிருக்கிறது)
* பிணங்களின் முகங்கள் 2003 (கோவை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளையின் சிறந்த நாவல் பரிசு பெற்றது.ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது)
* சமையலறைக் கலயங்கள் 2005 (ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது)
* தேனீர் இடைவேளை 2006 (ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாகியுள்ளது)
* ஓடும் நதி 2007 (என்சிபிஎச்-கலை இலக்கியப் பெருமன்ற விருது பெற்றது)
* நீர்த்துளி 2011 (ஜெயந்தன் படைப்பிலக்கிய விருது சிறந்த நாவலுக்கு)
* சப்பரம் (இந்தியிலும், மலையாளத்திலும் வெளிவந்துள்ளது)
* மாலு (இந்தியிலும் வெளிவந்துள்ளது)
* நைரா (உயிர்மை)
* தறிநாடா (என்சிபிஎச்)
* புத்துமண் (உயிர்மை)
* கோமணம் (முன்னேற்றப் பதிப்பகம், கிழக்கு) மலையாளத்திலும் வெளிவந்துள்ளது.
* கடவுச்சீட்டு (முன்னேற்றப் பதிப்பகம், பழனியப்பா)
* ரேகை (பொன்னுலகம் திருப்பூர்)
* அந்நியர்கள் (எழுத்து/கவிதா) ரூ.300 (ஒரு லட்சம் ரூபாய் எழுத்து பரிசு பெற்றது.
* 1098 – நாவல் (ரூ.160 ஜீரோ டிகிரி)
* 14/40 கொண்டை ஊசி வளைவு (ரூ.135 உயிர்மை)
* முறிவு (உயிர்மை) ரூ. 150
* திசையொன்று (உயிர்மை) ரூ. 180
* பெயிண்ட்பிரஷ் நெம்பர் 000 (மொழிபெயர்ப்பு நாவல்–அஞ்சு சஜீத் / தமிழில் சுப்ரபாரதிமணியன் ரூ 200, நோசன் பிரஸ்)
* திரை (ஜீரோ டிகிரி) ரூ.320
* ஒரு கை உணவில் (டிஸ்கவரி) ரூ.230
* சிலுவை (என்சிபிஎச்) ரூ.1,200
* நகரம் 90
* கொரானா தடுப்பூசி